உ

பொய்யா மொழிப் புலவர் சரிதம்

பொருள் அடக்கம்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 4919

5715

முகவுரை.

புலவர் சரிதமெனில், மணற்கண் விழுந்த ஊசிபோல் விஷயம் ஆழப்புதைந்து காணுதற்கு அருமையா யிருக்கின்றது. இந்நிலைமையி லுள்ள அவர்தம் ஜீவிய வரலாற்றை முறைப்படுத்தித் தொகுத்து முற்றிய சரிதமாக்கித் தருவது சுலபமாய் முடிவதோ? முடிசார்ந்த மன்னரும், வள்ளல்களும், பெரும் பிரபுக்களும் உச்சிமேற்கொண்டு உன்னத ஸ்தானத்தில் வைத்துச் சிறந்த வகையில் பாராட்டிப் போற்றிய நம் தமிழகப் புலவர் பெருமக்களது அரிய வரலாறுகள், இவ்வாறு மறைந்தொழிந்தது நமது நாட்டினர் துரதிர்ஷ்ட வசமென்று கூறுவதன்றிப் பிறிதென் சொல்வது? இதுபற்றி நாம் இரங்கியாவதென்ன? செய்ய வேண்டியகாரிய மொன்றுளது. அது செய்தால் ஒருவாறு இக்குறைகள் நிவர்த்தியாகலாம்; ஆங்கிலத்திலும், தமிழிலும் பட்டம்பெற்று ஆராய்ச்சி வன்மையும் அனுபவம் வாய்ந்த வித்யார்த்திகள் மேனாட்டுச் சரிதமுறையாகிய "Men of Letters" வகையைத் தழுவி "பழந்தமிழ்வாணரின் சரிதங்களை" வரிசைக் கிரமமாக எழுதவும், அவைகளைச் சர்வகலாசாலையார் அங்கீகரித்து அபிமானம் பாராட்டி உயர்தர வகுப்புகளுக்குக் கட்டாய பாடமாக வைப்பதென்ற தீர்மானஞ் செய்வதுமே யாம்.

இங்ஙனஞ் செய்தால், ஆங்கிலமே பெரிதென்னுங் கொள்கையுடைய மாணவர், இம்முறையி லமைந்த தமிழ்ப்

புத்தகங்களைப் பார்க்கச் சற்று கண்திறப்பர். அப்பொழு தேனும் தமிழ்ப் புலவர் பெருமை, ஒழுக்கம், உயர்வு, கவியருமை, கல்விப்பெருக்கம் முதலிய சிறப்புக்களை அறிந்து அதில் அன்பும் அபிமானமும் வைப்பர். தமிழுஞ் சிறக்கும், அதுவிஷயத்தில் சிரமப்படுவோருக்கு ஊக்கமும் நன்மையும் உண்டாகலாம். சர்வகலாசாலையாரும், வித்யார்த்திகளும் முன்வரவேண்டும். அயில்வே லண்ணல் அருள்புரிவானாக.

தங்கள் முன்னர் பெய்திருக்கும் இச்சிறு வரலாறு இதுவரையும் கிடைத்துள்ள குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு தொகுத்ததாகும். இத்தொகுப்பு முறையில் நமது கருத்து மிகச் சிரமமுற்றது. இக்கால நாகரிக முறைக்கேற்பத் தமிழ்ப் புலவர் சரிதங்களை வெளியிட வேண்டுமென்று கொண்ட நமது கருத்தின்படி ஒட்டக்கூத்தர், இரட்டையார், அருணகிரிநாதர் முதலிய சரிதங்களை இதற்குமுன் வெளியிட்டோம். அதனைக் கண்ணுற்ற சிலபாடசாலைத் தலைமை உபாத்தியாயர்களும், தமிழபிமானிகளும் மகிழ்ந்து அன்பு பாராட்டி ஆதரவு கூறித் தத்தம் பாடசாலைகளில் 3-ஆவது 4-ஆவது வகுப்பு மாணவர்கட்குப் பாடப்புத்தகமாக வைத்தனர். இதனால் நம் முயற்சி ஒருவாறு தமிழ் மாணவர்க்குப் பயன்பெற்றது கருதி இதனைப் ‘பழந்தமிழ்வாணர் இரண்டாம்’ மலராக வெளியிட முன்வந்தோம்.

தேசாபிமானிகளுடையவும், தமிழ்ப் புலவர்களுடையவும் ஜீவிய வரலாறுகளை நமது மாணவரும், நாமும் படித்துணர்வோமாயின், வாழ்நாட்களின் காலம் உன்னத ஸ்தானத்திற்கு உயர்த்தப்படக் கூடுமென் றெண்ணுகிறோம். சரித்திரத்தினால் உலகில் பயனடைந்தவர்கள் அனந்தம்.

நமக்குள் சரித்திரம் எழுதிவைக்கப்படா தொழிந்ததே நாம் அடைந்துள்ள இத்துணை இழிவுக்குங் காரணமெனலாம்.

ஆனதால், நமது மாணவரும், பிறரும் அவசியம் நமது பழந்தமிழ்வாணர் ஜீவிய வரலாறுகளைப் படித்து, அவர் ஒழுகிய அடிச்சுவடுபற்றி நடந்து நன்மை எய்துமாறு வேண்டுகின்றோம்.

இச்சரிதத்தை அச்சிடும்போது எமக்குதவியா யிருந்து புரூப் முதலியவை திருத்திப் பாயிரமெழுதி உப கரித்த தமிழ்ப் பேறறிஞர் ஸ்ரீமான் வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A., அவர்கள் நல்லன்பிற்கு அன்பார்ந்த வந்தனங் கூறுன்றோம்.

இச்சிறு புத்தகத்தை அச்சிட்டு வெளிபடுத்த வேண்டு மென்று விரும்பிய எமது வேண்டுதலுக்கு அன்புடன் மனமுவந்து அதற்காகும் செலவுகளை ஏற்றுதவிய சென்னை திருவல்லிக்கேணி மெஸர்ஸ் "லலிதா விலாஸ புத்தகசாலை யார்"க்கு நமது நன்றியதலுடன் கூடியு வந்தனத்தைச் செலுத்துகின்றோம்.

சென்னை : 25-8-22. } சி. கு. நாராயணசாமி முதலியார்.



அகஸ்தியர்

தமிழ்ப் பெருந்தாதை.

சென்னை

கம்பேனி ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ், மானேஜர்,

ஸ்ரீமான் வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.

அவர்கள் கூறிய

சிறப்புப் பாயிரம்.

முற் காலத்திருந்த நமது அருமைத் தமிழ்ப் புலவர்களது வாழ் நாட் சரிதங்கள் இல்லாமை நம் தமிழ்மொழி நூல்களுக்கு ஒரு பெருங் குறையா யிருக்கின்றது. அக் குறையை நீக்க உழைத்து வரும் நன் முயற்சியை மேற்கொண்டவர் இந்நூலாசிரியராகிய ம-ள-ள-ஸ்ரீ சி. கு. நாராயணசாமி முதலியார். ஒட்டக் கூத்தர், புகழேந்தியார், இரட்டையர் முதலியோர் சரித்திரம் இவர் முன்னரே எழுதி வெளியிட்டுள்ள விஷயந் தமிழுலகம் அறியும். சரித்திரம் எழுதுவதற்கு வேண்டிய ஆதாரங்கள் ஓரிடத்திற் கிடைப்பதரிதாகிய இடையூறு பெரிதுந் தம்மை அச்சுறுத்தியும், அதற்கஞ்சாது தேனீக்கள் பல புட்ப வகைகளினின்றும் தமது முயற்சி வழியாகவே நறிய தேன் கூட்டுவது போலவும், ஆலம் புரண் டெழுந்தும் அதற் கஞ்சாது பாற் கடலைப் பின்னுங் கடைந்து அமுதந் திரட்டிய தேவரது செய்கை ஒப்பவும், முதலியாரவர்கள் தமிழ் நூல்களிற் பல் வேறிடத்துச் சிதறுண்டு கிடந்த அருமை விஷயங்களை எடுத் தாராய்ந்து ஒருவழிப் படுத்தி எவ்வளவு தூரந் திடமாக உண்மைச் சரித்திரமெனக் கூற முடியுமோ அம் மட்டோடு நிறுத்தி இச் சரித்திரத்தை எழுதி முடித்துள்ளார்.

பொய்யா மொழிப்புலவர் முக்கியமாகத் தமிழ் மக்களது நினைவுக்கு வருவதற்குக் காரணம், அவர் குழந்தைக் குமரனைப் பாடேன் என இருந்த முரட்டுத்தனம் பங்கப்பட அக்கடவுளால் ஆட் கொள்ளப்பட்ட லீலா விநோதமே. முருகக் கடவுளுக் குகந்த அடியராம் ஸ்ரீ அருணகிரியாரும் இவரை "முரட்டுப் புலவர்" என்றார். தம்மை வணங்காதவர்களை வணங்கச் செய்வதிலும், பாடாதவர்களைப் பாடச் செய்வதிலும், அடங்காதவர்களை அடக்குவிப்பதிலும் எஃகுடை யண்ணலுக்கு எந்நாளும் மிக்க மகிழ்ச்சி. அவர் பிரமனைச் சிறையிட்டதும், ஔவையொடு நாவற்பழ விநோத லீலை செய்ததும் யாவரே அறியாதவர்? தம்மைப் பாடாத வைராக்கியங் கொண்ட இப் பொய்யா மொழிப் புலவரிடம் அப்பிறப்பிலேயே ஒரு வெண்பாவைப் பெற்றதோ டமையாது அவரையே மீண்டும் அருணகிரி நாதராக இப்புவியிற் பிறக்கச் செய்து அவரிடம் தேனோ! அமுதமோ! என ஞானிகளும் பாவலரும் பாராட்டும் அருமை வாய்ந்த பதினாறாயிரந் திருப்புகழ்த் தேம்பாவை பெற்றும், அவராற் கந்த ரலங்காரம், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரநுபூதி என்னும் பாமாலை புனையப் பெற்றும் எமதையன் மகிழ்ந்ததாக ஆன்றோர் கூறுவார். இவ்விஷயம் யாம் எழுதிவரும் "அருணகிரி நாதர் சரித்திர ஆராய்ச்சியில்" வெளிவரும். இதற்கு மேற்கோள் காஞ்சி, 'சிதம்பரமுனிவர்' அருளிய க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழிற் சிறு பறைப் பருவம் முதற் செய்யுள்,

"தருப்பொலியு மமரா பதிக்கரசானவன்
சபையில் நடராச ரங்கைத்
தமருகத் தெழுசத்த சூத்திர வியாகரண
சாகரந் தான் விரித்தோன்

பொருப்புயர் பரங்கிரியின் மறுகினன் மெய்க் கவிசொல்
பொய்யா மொழிப்புலவராய்
பொன்பா வெனுங் கவியுன் முன்பாட வுன் பாடல்
பூவுலகிலே கொண்டு மேற்
கருப்பவ மகற்றவரு மருணகிரி நாதராய்க்
கந்த நின்னருள் பெற்றபின்
கற்பகக் கனிரசக் கடலமுதவாரி தென்
கடலென மகிழ்ந்து பாடுந்
திருப்புகழ் முழக்கமணி யீராறு செவியனே
சிறுபறை முழக்கியருளே
தென்னருணை வளர்கோபு ரத்திவாழ் முருகனே
சிறுபறை முழக்கி யருளே."

முருகக் கடவுளால் ஆட் கொள்ளப்பட்டவர்கள் இவர் இவர் என்று, சிதம்பர முனிவர் ஷை பிள்ளைத்தமிழ் முத்தப் பருவம் ஈற்றுச் செய்யுளிற் கூறுகின்றார். அச் செய்யுளில் "நீ முன் புகழ்ந்த பொய்யாமொழி" என விசேடித்துச் சொல்லி யுள்ளார். அப்பாடல் பின் வருமாறு :—

"செவிக ளொரு பன்னிரண்டுங் கேட்க வயனையுந்
தேவர் பணியும் குருவையுந்
தேவர்கோ னென்ற சத மகனையுஞ் செந்தமிழ் சொல்
தென்பொதிய மலைமுனியையும்
புவியி னற் கீரரையு மவ்வையையு நீ முன்
புகழ்ந்த பொய்யா மொழியையும்
புகழ் கொண்ட வருணகிரி நாதரையும் வெகு சித்தர்
போற்று கருவூர ரையுங்
குவியுமன மருச் சிறுப் புலவரையும் வருபுலவர்
கொண்டாடு நல்ல பகழிக்
கூத்தரையும் வளர் காசி வாழுஞ் சிவானந்த
குமரகுரு பரமுனியையுங்

கவி சொலென் றேயடி யெடுத்துக் கொடுத்தவன்
கனிவாயின் முத்த மருளே
கந்தனே புள்ளூரில் வந்த முத்துக் குமர
கனிவாயின் முத்த மருளே."

புலவர்க்குப் புலவராய்த் தமிழ்க் கடவுளாலேயே பாராட்டப் பட்ட பொய்யா மொழியார் சரித்திரம் ஒருங்கு திரட்டப் பட்டு நமக்குக் கிடைத்தது புதைய லெடுத்த தனம்போலே போற்றத்தக்கதாம். ஏனைய புலவர்களது சரித்திரங்களும் நமது முதலியாரவர்கள் மூலமாக வெளி வருவதற்கு வேண்டிய ஆக்கமும் ஊக்கமும் இறைவன் அவருக்கு அளிக்குமாறு ஆறுமுகக் கடவுள் அநுக்கி ரகிப்பாராக!

நாறு தமிழறி நாரா யணசாமி நல்லறிஞன்
ஆறு முகனுக் குகந்த பொய் யாமொழி யார் சரிதம்
வேறு படவே சிதறுண் டிருந்த விடயமெல்லாங்
கூறு படுத்தித் தமிழ்நாடு கொள்ளக் கொடுத்தனனே.

சென்னை :
292, லிங்கிசெட்டி தெரு,
25—8—22.

இங்ஙனம் :
வ. சு. செங்கல்வராயன்.

மேற்கோள் செய்யுட் டொகை.

---

1. தொண்டைமண்டல சதகம்.
2. சோழமண்டல சதகம்.
3. பாண்டிமண்டல சதகம்.
4. தமிழ் நாவலர் சரிதை.
5. தனிச்செய்யுட் சிந்தாமணி.
6. திருக்குறள்.
7. தேவாரம்.
8. திருப்புகழ்.
9. திருவிரிஞ்சை முருகன்பிள்ளைத்தமிழ்.
10. தணிகைச் சந்நிதிமுறை.
11. தணிகை உலா.
12. சேயூர் முருகன்பிள்ளைத்தமிழ்.
13. தஞ்சைவாணன் கோவை.
14. புலவர் புராணம்.
15. தமிழ்க்கவி சரிதம்.
16. நாலடியார்.
17. அபிதானகோசம்.
18. சிலப்பதிகாரம்.

இவரால் பாடப்பெற்றோர்கள்.

தெய்வங்கள்.

திரிசிரபுரம் தாயுமானப் பெருமான், வேட்டுவக் குமரன்.

அரசர்கள்.

வணங்காமுடிப் பாண்டியன், இராஜேந்திர சோழன், தஞ்சைவாணன், அரசூர் சிங்கப்பிரபு.

பிறர்.

காளையார்கோயில் கூத்தாள் முதலியோர், உருத்திர கணிகையர் எழுபதின்மர், கண்டியூர் வண்ணாத்தி, குலோத்துங்கச் சாவகன் (புலையன்).

இவர் சென்றிருந்த யாத்திரை ஸ்தலங்கள்.

திரிசிரபுரம், மதுரை, காளையார் கோயில், (திருக்கானப்பேர்) தஞ்சாக்கூர், சோழநாட்டுத் தஞ்சை, அரசூர், கண்டியூர்.

இவர்பாடிய நூல்கள்.

தஞ்சைவாணன் கோவை, சில தனிநிலைக் கவிகள்.

இவர் காலத்துப் புலவர்.

தமிழ் மூதாட்டியாகிய ஔவையாரும், பிறரும்.

செய்யுள் முதற்குறிப் பகராதி.

உ

முருகவேள் துணை.

பொய்யா மொழிப் புலவர் சரிதம்.

நேரிசை வெண்பா.

பொய்யா மொழிப்புலவன் காதை புகல்வதற்கு
மெய்யா மறிவெனக்கு மேவுவிக்கக்—கையார்
முகத்தானே யன்பேறு மூதறிஞ ருள்ளத்
தகத்தானே முன்னின் றருள்.

வரகவியாக உலகம் புகழத் திகழ்ந்து பெருமையுடன் சிறந்த பொய்யா மொழிப் புலவரின் ஜீவிய வரலாற்றை எழுதி வெளியிட வேண்டு மென்பதில் கவலை மிகத் தோன்றி அதில் மிக முயற்சிகொண்டு வந்தோம். நமது நன்முயற்சியின் பயன் பெரிதும் பிரதிபலிக்க வாய்க்கவில்லை. காரணம், நமது செந்தமி ழகத்தில் யாவரும் பரவும் மேவருஞ் சிறப்புடன் வீற்றிருந்த தமிழ்ப் பெரும் புலவர்களது அரும் பெருஞ் சரிதைகளை அன்னார் வாழ்ந்த காலம், இடம், குணம், கல்வி, சிறப்பு, அபிமானித்த பிரபு முதலிய சம்பவங்களை நமது முன்னோர், பின்னோருணர்ந்து மகிழுமாறு போற்றிவைக்கத் தவறியதால் நாமறிந்துரைத்தற்கு இயலாததே. மேனாட்டு நாகரிகஞ் சிறந்த ஆங்கிலக் கவிகளின் சரிதங்களில் இத்தகைய குறைகள் காண்பது அபூர்வமாகும். சென்றதற் கிரங்குவது விவேகமன்றென விடுத்து இப்புலவர் விஷயமாகத் தற்காலம் வழங்கப்பெறும் பாவலர் சரித்திர தீபகம், புலவர் புராணம், தமிழ் நாவலர் சரிதை, சோழமண்டல சதகம், தொண்டை

மண்டல சதகம், தனிப்பாடற்றிரட்டு, தனிச்செய்யுட் சிந்தாமணி, அபிதான கோசம், அபிதான சிந்தாமணி. செந்தமிழ்ப்பத்திரிகை, முதலிய நூல்களில் காணப்படும் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு ஒருவாறு இப்புலவர் வரலாற்றைக் கூறுவோம். இங்ஙனம் கூறப்புகுந்த வரலாற்றில், இவரது இயற்பெயர், ஜனன விசேடம், தாய்தந்தையர், இளமையின் வளர்ச்சி, முதலியவை இப்போது அறியக்கிடைக்காமையால் அவை விடுபட்டுள்ளன வென்பதை வாசகர் உணரவேண்டும்.

இனிப்புலவர் வரலாறு வருமாறு:—பொய்யா மொழிப் புலவர் நாடு "தொண்டைநாடு" என்பதும், இவர் ஜனன ஸ்தலம் அம்மண்டலத்திலுள்ள "செங்காட்டுக் கோட்டத்துறையூர்" என்பதும், அடியில் வரும் பாடல்களால் அறியப்படுகின்றன.

"கையா றிரண்டுடைக் காளைதன் வாயிற் கவிதைகொண்ட
பொய்யா மொழிக்கும் புகலிட மானது பொய்கையெல்லாஞ்
செய்யார் கமல மலரவண் டானங்கள் சென்று திகழ்
மையார் குவளை வயல் புடை சூழ் தொண்டை மண்டலமே

(தொண்டமண்டல சதகம். 18)

பொழிப்புரை.

"தடாகங்களி லெல்லாம் மலர்ந்திருக்கின்ற தாமரை மலர்களில் நாரைகள் சென்றிருக்க விளங்குவதும், கருமை நிறமுடைய நீலோற்பல மலர்கள் மலர்ந்திருக்கின்ற வயல்கள் எப்பக்கங்களிலும் சூழ்ந்திருக்கப் பட்டதுமாகிய இத்தொண்டைமண்டலம், பன்னிரண்டு கைகளையுடைய குமாரக்கடவுள் வேட்டுவக் குமரனாகி வந்து தம்மைப் பாடியதற்கு ஈடாகத் தமது திருவாய் மலர்ந்து பாடியருளிய

பாடலைப்பெற்ற பொய்யா மொழிப்புலவர் வாழ்ந்த செங் காட்டுக்கோட்டத்துறையூர் என்னுந்தலத்தைத் தன்னி டத்தே கொண்டிருக்கின்றமையால், அப்பொய்யாமொழிப் புலவருக்கும் புகலிடமாகியது" என்பதாம்.

*" பொதியி லகத்தியனுய்ப் பொய்யா மொழியாய்
அதிகை யமரப்பர்க் காளாய்த்—துதிபெருகு
செங்காட்டுக் கோட்டந் துறையூ ரெனுந்தலத்துச்
சங்காத்தங் கொண்டிருப்பாய் தான்."

(தமிழ் நாவலர் சரிதை. 52)

இவரது இளமைப் பருவத்தில் வித்தியாப் பியாசத்தின் பொருட்டுத் தந்தையார், அக்காலத்தில் தொண்டைநாட்டு வயிரபுரத்தில் சிறந்த பண்டிதராக விளங்கிய ஒரு உபாத்தி யாய ரிடத்துத் தம்மகனை ஒப்புவித்துக்கல்வி பயிற்றுமாறு வேண்டினர். ஆசிரியரும் அங்ஙனமே ஆகுகவென அச்சிறு வனை யேற்றுக் கல்வி போதித்த காலம்போக மற்ற வேளை களில் தமது கால் நடைகளைக் கவனித்து வரும்படி கட் டளை யிட்டிருந்தனர். சிறுவனும் அவ்வாறே நடந்து வந் தான்.

போய்யா மோழியார் ஆசிரியர் பாடியது.

*" பொதியி லகத்தியனுய் பொய்யா மொழியாய்ச்
சிதைவில் புலவர் சிகையாய்த்—துதிசேரும்
செங்காட்டங் கோட்டந் துறையூ ரெனுந்தலத்தில்
தங்காட்டங் கொண்டிருப்பாய் தான்." (த. செ. சிந்தாமணி)

இச்செய்யுள், பொய்யா மொழிப் புலவர் செங்காட்டுக்கோட் டத் துறையூரில் வசித்தா ரென்றும், இவரது ஆசிரியர் இவரை ஆசிர்வதித்துப் பாடியதென்றும் வழங்குவர்.

" அதிக வமணப்பர்க்கீழாய் " என்ற பாடம் ஏட்டுப் பிரதியிற் கண்டது. சுத்தபாடந் தெரியவில்லை.

இங்ஙனம் நிகழும் தினமொன்றில் ஆசிரியர் கம்புக் கொல்லையின் விளைபயிரை அவ்வூர் அதிகாரி "காளிங்க ராயப்" பிரபுவின் குதிரை மேய்ந்து பாழ்படுத்தியது. நித்திரையிலிருந்த சிறுவன் திடுக்கிட்டு விழித்துத்தனது கவனக்குறைவால் குதிரை செய்த கொடுமையை நினைந்து மெத்த வருந்திச் செய்யும் வகையறியாது ஆசிரியர் தண்டனைக்கஞ்சி அடுத்திருந்த ஆலயத்தில் கோயில் கொண்டருளிய காளிதேவியின் சந்நிதியிற் சென்று விஷய முணர்த்தி முறையிட்டழுது தொழுதனன். சிறுவனது பரிவும், ஜன்மாந்திரத் தவப்பயனும், ஆகூழும், ஒருங்கு கூடிக் காளியின் திருவுளத்தைக் கனியச் செய்ய, தேவி மகிழ்ந்தவளாய்க் காளமேகப் புலவருக்கு அகிலாண்டநாயகியார், வலியத் தரிசனம் தந்து ஆட்கொண்டருளிக் கவி பாடச் செய்தவாறு போல, இச்சிறுவனுக்குத் தரிசனம் தந்து நாவைத்திறக்குமாறு கட்டளையிட்டுத் தமது சூலத்தால் பீஜாக்ஷரமெழுதி, "இவன் வாக்கினின் றெழும் சொல் பொய்யாததாக" என அனுக்கிரகித்து மறைந்தனர்.

இவ்வாறு வலியவந்து காட்சி தந்து ஆட்கொண்டருளிய தேவியின் தரிசன விசேடத்தால் உள்ளத் தெளிவும், கல்வியுணர்ச்சியும், தாமே சுரக்கத் தொடங்கின. கவி பாடுந்திறமையும், உயர்ந்த எண்ணங்களும் இவர் மனத்தில் தோன்றி ஊற்றெடுத்தன. களிம்பு நீங்கிய செம்புபோல அறியாமை நீங்கிய இயல்பினராய்க் கண்டார் யாவரும் விரும்புமாறு விளங்கித் தோன்றினர். தேவியைப் பல விதமாகப் புகழ்ந்து பாமாலை சூட்டி வணங்கினர். பின்னர் ஆசிரியர் கம்புக் கொல்லையை அழித்த குதிரையின்மீது சினங்கொண்டு கோயில் நீங்கிக் குதிரையை யடுத்து,

* "வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே !
ஆய்த்த வருகா ரணிவயலிற்—காய்த்த
கதிரைமா ளத்தின்ற காளிங்க னேறுங்
குதிரைமா ளக்கொண்டு போ." (*தமிழ் நாவலர் சரிதை*).

பொழிப்புரை.

"நீர் நிலவளங்கள் வாய்க்கப்பெற்ற வயிர புரத்தில் வாழ்கின்ற (எனது தாயாகிய மகாகாளியே ! தெள்ளிய மணல் வாய்ந்த நிலத்திலும், அழகிய மலைச்சார்பிலும் விளைந்திருக்கின்ற தானியக் கதிர்களையெல்லாம் அழியும்படி மேய்கின்ற காளிங்கராயன் ஏறிச்செலுத்தும் (பட்டத்துக்) குதிரையானது இறந்து போகுமாறு (அதனுயிரை) அபகரித்துக் கொள்வாயாக" என்பதாம்.

எனக்கூற இவர் வாக்கு விசேடமும், தேவியின் அனுக்கிரகமும், பொய்யாது அக்குதிரை சட்டென விழுந்துயிர் நீத்தது. அருகிருந்தார் இப்புதுமையை அதிகாரிக்கறிவிக்க, அவர் ஆசிரியருடன் அங்கு வந்து விஷயமுணர்ந்து அவரையணுகி, 'நும் வாக்கின் நன்மை அமைந்தவாறு வியப்பு ; அற்றாயின், இறந்ததனை மற்றோர் கவியால் மீட்க,' வென வேண்டிக் கொள்ள, அவரும், தேவியை நினைந்து,

"வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே !
ஆய்த்த வருகா ரணிவயலிற்—காய்த்த
கதிரைமா ளத்தின்ற காளிங்க னேறும்
குதிரைமீ ளக்கொண்டு வா." (*தமிழ் நாவலர் சரிதை.*)

---

* வயிரபுரமென்பது சோழநாட்டின் மாயூரந்தாலுக்காவிலுள்ள க்ஷேத்திரபால புரமென்றும், இச்செய்யுளும், இதன் விருத்தாந்தமும் கம்பருடையதாகக் கூறப்படுகிறது தவறெனவும், தமிழ் நாவலர் சரிதையாலறியக்கிடக்கின்றது.

என அக்கவியைத் திருப்பிப்பாடினராக. அக்குதிரையும், உயிர் பெற்று உடலுதறி எழுந்து நின்றது. இது கண்ட ஆசிரியர் அவரது சாபாநுக்கிரக சக்திக்கு வியந்து மகிழ்ந்து அவரை யிறுகத்தழுவி, "நீர் பொய்யா மொழியீர்" என்று கூறி ஆசீர்வதிக்க, அதுமுதல் அவரை யெவரும் பொய்யா மொழியா ரென்றே வழங்கி வருவாராயினர். தாய் தந்தைய ரிருவரும் தமது அருந்தவப் புதல்வராகிய பொய்யா மொழியின் புலமைத் திறனைக்கேட்டு,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக் கேட்ட தாய்"
"சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே"
"சான்றோ ரென்கை யீன்றோர்க்கழகு"

என்னும் இலக்கணத்துக் கொத்துப் பெருமகிழ்வு கொண்டாடினர். (இது தொடங்கி இவர் மதுரைப் பிர யாணம்வரை, யாதொரு வரலாறும் தெரிவதற்கில்லை.)

காளியின் திருவருள் பெற்றுக் கவிஞர் சிகாமணி யாய் விளங்கிய இவர், மதுரைமாநகரில் பாண்டிய மன்னர் களால் செந்தமி ழறிஞர்களில் சிறந்தோரைக்கூட்டி நன்கு பரிபாலித்த தமிழ்ச் சங்கம் மூன்றும் நிலைகுலைந்து அழி ந்து ஒழிந்ததை யுணர்ந்து மீண்டும் அதனைப் புதுப்பித் துத் தமிழை வளம்படுத்த ஆவல்கொண்டு,

"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியுஞ்
சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனுஞ்
சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கு
மங்கலப் பாண்டி வளநாடு"

காணத் தொண்டை நாட்டினின்றும் வழிக்கொண்டனர். இடையிலுள்ளதும் சைவசித்தாந்தப் பிரசாரகராய்த் தேனினுமினிய தீந்தமிழ்ப் பாக்கள்பல கடவுள் மீது

பாடிச்சிறந்த, தாயுமானப் பெருந்தகையார் அவதரித்த தும், மலைமேல் கோயில்கொண்ட கடவுளிடத்து அன்பு மிகுந்த மாதொருத்தி கருப்பமாயிருந்து பிரசவகாலத்திற் காவிரி பெருகினதால் தன் தாய்வந்து உதவப் பெறுமல் சங்கடப் படும்பொழுது அக்கடவுள் தாமே அவளுடைய தாயைப்போல் வந்து மருத்துவம் பார்த்து ஆதரித்துத் * "தாயும் ஆனவர்" என்னும் பெயர்பெற்று விளங்கும் திருத்தலமுமாகிய † திரிசிராப்பள்ளியை யடைந்து சில நாள் தங்கியிருந்தபோது, புலவர்பால் கவிகேட்டுக் களிக்க விரும்பிய "பாட்டுக் குவந்தருளும் பரமேட்டி" ஒரு புலவர் வேடம் புனைந்து பொய்யா மொழியை யணுகித் தமிழ் விஷயமாகச் சில வாது நிகழ்த்தி,

‡ "கோட்டாற் கொழும்பிரசங் குத்தி யதனடுவே
பாட்டாற் பனைக்கை புகமடுக்கும்—காட்டானை
தேனீ ரருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை."

பொழிப்புரை.

"காட்டானை தனது கொம்பினல் தேன்கூட்டைக் குத்தி அந்தத்துவாரத்தின் நேரேயே தனது பொருத்துதலை

---

* இக்கடவுளுக்கு இப்பெயருண்டென்பது—
"தாயு மாயெனக் கேதலைக் கண்ணுமாய்ப்
பேய னேனையு மாண்ட பெருந்தகை
தேய நாதன் **சிராப்பள்ளி** மேவிய
நாய னுரென நம்வினை நாசமே." (என்பது தேவாரம்.)

† '**திரிசிரன்**' என்னும் அரக்கன் பூசித்தமையின், இத்தலத்திற் குத் திரிசிராப்பள்ளியென்று பெயருண்டாயிற்று.

‡ முதலுங் கடையுஞ் சேர்க்கக் கோட்டு மலை—யானை.

யுடைய பனைபோலும், துதிக்கையை நீட்டி அங்கிருந்து வழியும் தேனாகிய நீரைக் குடிக்கும் (மலை வளம்) செழுமை வாய்ந்த திரிசிராப்பள்ளி மலையே கங்காதரனது மலை." எனப் பொருள் தரும் கவியைக்கூறி, தாம் விரும்பியுறையும் திருத்தலம் இஃதெனப் புலவர்க்குணர்த்தி மறைந்தனர்.

புலவர், கடவுளின் திருவிளையாடலுக்குப் பெரிதும் அதிசயித்து மலைமேல் கோயில் கொண்டருளும் மாதுரு பூதேசுரரை வணங்கித் தொழுது அப்பெருமான்மீது,

"புலித்தோலை உடையாக அழகிய அரையிலுடுத்திப் பாம்பையும், கூனலான சந்திரனையும் ஆபரணமாகக் கொண்டருளிய சிவபெருமானுக்கு வாசஸ்தானமாவது, திரண்டவாள்போற் கூரிய பற்களையும், கொடிய பார்வையு முடைய புலிகளை அப்பாற் போகவிடுத்து யானைகளின் வருகையையே விரும்பிப் பலவிதமாக எதிர்நோக்கித் தனித்தனிச் சிங்கங்கள் பதிவிருக்கின்ற திரிசிரா மலையே யாம்" என்னுங் கருத்துத்தோன்ற,

* அங்கம் புலியத ளாடையைச் சாத்தி யரவமுடன்
பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பனை வாளெயிற்று
வெங்கட் புலியைவிட் டியானையைத் தேடி விதம்விதமாய்ச்
சிங்க மிருந்து தனித்தனி நோக்குஞ் சிராமலையே." (61)

(தமிழ் நாவலர் சரிதை)

எனப் பாடித்துதித்தனர். பின்னர்த் திரிச்சிராப்பள்ளியை விட்டு நீங்கி மதுரையை நோக்கிப் பிரயாணங்கொண்டனர்.

வழியிலுள்ள பாலைவனத்தை வெகு இளைப்புடன் கடக்கும்போது முன்னர், ஒரு குகனடியார் தம்மையடுத்து,

* முதலும் கடையுஞ் சேர்க்க அங்கமலை—யானை.

முருகப்பிரான் மீது ஒரு பிரபந்தம் பாடித் தரும்படி கேட்கச், சிவகவியாகிய பொய்யாமொழிப் புலவர், சிவபெருமானையன்றிப் பிறரைப் பாடுவ தில்லையென்றும், சிவனாகிய சேவற்கு ஒரு குஞ்சு போன்ற குமரனைப் பாடுதல் இயலாதென்றும் கூறியபோது, அவ்வடியார் மிக வருந்தி இவ்விஷயத்தைக் குமரகோட்டஞ் சென்று சந்நிதியின் முன்னின்று, "புலவன் மொழிந்த தூஷணத்தைப் பொறுக்கவில்லேன், அவன் அகங்காரத்தைப் போக்கியருளல் வேண்டும்." என்றிரந்தனர். குமரவேளும் அவ்வாறேயாகவென்று அறிவித்துச் சமயத்தை எதிபார்த்திருந்தனர். அச்சமயம் இப்பொழுது நேர்ந்தபடியால், குமாரக்கடவுள் பொய்யா மொழிப்புலவரைத் தடுத்தாட் கொள்ள விரும்பித் திருக்கரத்திலே வேலும், வில்லும், அம்புகளுங் கொண்டு காலிற் செருப்பணிந்து கார்மேகம்போல வேகமாய் நடந்து ஆர்ப்பரித்து ஒரு வேடராக வந்தார். வேடுவச்சியை விரும்பிச் சேரும் வேலவனுக்கு வேடுவக்கோலம் புனைதல் இயல்புதானே. இக்கோலங் கண்ட புலவர் திடுக்கிட்டஞ்சி, இனியாது நேருமோவென்று கருதி அயர்ந்து நின்றனர். சமீபத்துச் சேர்ந்த வேடமூர்த்தி, நீ யாவன்'? என வினவ, பொய்யாமொழியார் 'புலவன்' என்றார். வேடனாகிய வேலவன் இளநகையரும்பி, "புலவன்" என்னும் பெயர் குறிஞ்சித் தெய்வமாகிய செவ்வேள் தனக்கு ஏற்குமேயன்றி மற்றையோருக்குப் பொருந்துமோ? ஒரு சிறிது அத்தெய்வத்தின் மாணவன் ஆகிய அகத்தியர்க்குஞ் சேரும். நீ புலவன் என்று மொழிவது எமக்கு வியப்பாகவே தோன்றுகிறது; ஆயினும், கவிபாடும் பாவலரையும் புலவர் என்பதுண்டு. உனக்குக் கவி பாடவருமோ?" என்றனர்.

புலவர்க்கு இச்சொற் காதிற்பட்டதும், தம்மைக் கவர்ந்திருந்த அச்சம் ஒருவாறு நீங்கித் தமிழறிவுடைய இவனுல், நமக்கு இறுதி நேராதெனத் தெளிந்து துணிவும், சந்தோஷமுந் தோன்றப் 'பாடுவேன்' என்றார், "ஆயின், என்பெயரும், இந்நிலமும், சுரம்போக்குத் துறையும் அமைய வெண்பாவில், 'பொன்போல்' என்று தொடங்கி முடித்தி என்றார். புலவர், 'உன் பெயர் என்'? என்றார். வேட்டுவக் குமரன், (குஞ்சைப்பாடேன் என்றவன் குஞ்சினும் தாழ்ந்ததாகிய முட்டையை இப்போது பாடட்டும் என்றுட்கொண்டு) என் பெயர் 'முட்டை' என்றனர். உடனே புலவர் சுரம்போக்குத் துறையில்,

"மின்னலை யொத்த பெருமை தங்கிய வேலாயுதத்தை யேந்திய முட்டை என்பவனுக்கு மாறுபட்ட பகைவர் போகிற காட்டு வேலமுள் தைக்கின்ற காட்டில், கள்ளி மரத்தினின்று பொன்போலும் தீப்பொறி பறக்கின்ற கானவேனிலிலே, எனது பேதைப் பருவத்துப் பெண் செல்ல மனமிசைந்தாளே" என்னும் பொருள் பட :—

* பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே—மின் பாயும்
மானவேன் முட்டைக்கு மாறுய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு. (தமிழ் நாவலர்
சரிதை (70)

என்று பாடினர்.

இது கேட்ட வேடுவராகிய குறிஞ்சிநிலக் கடவுள் உண் மகிழ்ந்தனராயினும், வெளிப்பட்ட புன்னகையின

---

* பொன் பாவுங் கன்னிப் பொறிப்புறவே யேதிலன்பின்
என்பேதை போக விசைந்தனளே (என்பது பாடபேதம்.)

ராய் நகைத்து இச்செய்யுளில் சொற்குற்ற மிலவாயினும், பொருட்குற்ற முள்ளது என்றனர்.

இதுகேட்ட பொய்யாமொழியார் சினந்து, " பகைவரைக் கணத்திற் கொல்லும் வீரமிகும் உனது நெடிய வில்லுக்கும், கூரிய வேலுக்கும் பருத்துக் கனத்த தோளுக்கும் நான் பெரிதும் அஞ்சுகின்றே னெனினும், என் கவியில் குற்றமுள்ளதென நீ கூறும் வசைக்கு மட்டும் நான் சிறிதும் அஞ்சேன். என் கவியில் தவறிய பொருட்குற்றத்தை எடுத்துக்காட்டுதி " என்றனர். மறவணுகிய முருகவேள் கேட்பீராக, " சதுரக்கள்ளிச் செடிகள் எரிந்து பொறிபறக்கும் பெரு நெருப்பு மிக்க காட்டினிடத்தே சிறு நெருப்புக்குத் தானும் வெந்து சாம்பராகும் வேலமரத்து முள் காலில் தைப்பது இசையுமோ "? என்று கூறி, நான் பாடுகின்றேன் என்று அககவியில், அவர்பெயரும், பாலைவருணனைகளும், உரிப்பொருளும் அமைய, நீர் குற்றத்துட்டவறி வீழ்ந்தனையென்றும் குறிப்புந்தோன்றப் புலவர்பாடிய அச்சுரம்போக்குத் துறையிலேயே, " விழுந்த மழைத்துளி ஆகாசத்திற்றுனே வேகுமெனவும், தவறிக் கீழே விழுமாயின், தீச்சுடர்போல் கிளம்பிச் சுடுமெனவும், எக்கமுற்றுச் செழுமைவாய்ந்த மேகங்கள் மழைபெய்யாத பாலைவனத்தில், பொய்யா மொழிப் புலவனது பகைவரைப்போல் வளையலையணிந்த என் பெண்ணும் போயினள் என்ன அநியாயம் " என்னுங் கருத்துத்தோன்ற :—

" விழுந்த துளி யந்தரத்தே வேமென்று வீழ்ந்தால்
எழுந்து சுடர்வருமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினளே
பொய்யா மொழிப் பகைஞர் போல்."

எனப்பாடினர். கேட்ட புலவர் வியப்படைந்து நிற்க, முருகவேள் கோழியைப் பாடிக் குஞ்சையுமா பாடுவது என்று கூறிய முன்னைய நினைவுவரச் செய்து புலவரை ஆசிர்வதித்துத் தமது உண்மை உருவத்தைக்காட்டி, அவர் வழி யிளைப்பையும் மாற்றிப் பொய்யா மொழியார் நாவில் தம்வேலா லெழுதி அநுக்கிரகித்து மறைந்தருளின ரென்ப. இதனை முருகனருள் சிறக்கப்பெற்ற அருணகிரி நாதர்,

" முற்றித் திரி வெற்றிக் குருபர
முற்பட்ட முரட்டுப் புலவனை
* முட்டைப் பெயர் செப்பிக் கவிபெறு பெருமாளே."
† " முற்பா டப்பா டற்மு ருக்கோர்
முட்கா டற்கப் பொருளீவாய்."
‡ " வாய்ப்புற் றத்தமிழ் மார்க்கத்திட் பொருள்
வாய்க்குச் சித்திர முருகோனே."
** " கற்றுவிற் காட்டிக் கரைதுறை
†† நற்றுயிற் காட்டிப் புகழ் கலை
‡‡ கற்றார் சொற் கேட்கத் தனிவழி வருவோனே."

எனத் தமது திருப்புகழில் பலவிடத்தும் வியந்து பர்டியுள்ளார்.

---

* "துட்டப் பயல்பிது ராச்சிரம் வைத்திடுந் தொண்டன் மகன்
ஒட்டச் சிறுக்கி நலங்கிடை யாள்பெற்ற ஓ முடிவான்
குட்டப் பிணியுண் டயலார் தரவுணுங் கூன்வயிறன்
முட்டைக்கு மூத்தவன் கரிமுகன் வந்து முன்னிற்கவே"
துட்டு அப்பு—துளி ஜலம்.
அயல்பிதுராது சிரம்வைத்தவன்—ஈசன்.
ஒட்டச்சிறுக்கி—பாகங்கலந்தவள்.
நலங்கிடையாள்—நையுமிடையாள்
முட்டை—பொய்யா மொழிப் புலவர் கூறிய மானவேன் முட்டை என்ற கவியின் கருத்து. (இது பழங்கவித் திரட்டில் கண்டது.)

மார்க்கசகாய தேவரும் தமது " திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழில் ":—

"பொய்யா மொழிப் புலவர் மதுரையிற் சங்கம்
புரக்க வெழுநாள் மறவனுய்ப்
புறவுற வளைத்தெனது பெயர் முட்டை பாடெனப்
பொன்போலு மென்று பாட
வெய்யான பாலைக்கி தேலாது நின்பெயர்
விளம்பென விளம்ப வவர்மேல்
' விழுந்ததுளி 'யென்றெடுத்துப் பாடி யவர் நாவில்
வேல் கொடு பதித்த சதுரா."

என இச்சம்பவத்தை வெகு அழகாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அன்றியும்,

" கண்பாவுகா னகவேடனுய்க் கையம்புவில் லொடுமேவியே
பண்பாவு மென் பேயர் முட்டைநீ பாடாயொரு கவி யென்னலும்
புண்பாவு வெஞ் சுரவண்மை யாற் பொய்யாமொழிப் புலவோன்
சொலும்
வெண்பாவு கந் தணி மார்பனே வேலாயுதா வேலாயுதா."

(கந்தப்பதேசிகர்—தணிகைச் சந்நிதிமுறை-
வேலாயுத சதகம்.) (89)

' முட்டை ' என்று கூறியது இடுகுறியாக்க மென்பர் நன்னூல் விருத்திக்காரர். (பெயர் சூத்—17-உரை)

† முற்பாடு அற்க—முற்பாடு நீங்க.
கல்தாவில் காட்டி—மலையையொத்த வலியுள்ள வில்லைக்காட்டி.
* கரை துறை—சொல்லுகின்ற துறையை.

* * நற்றுயில் காட்டிப்புகழ் — நற்றுயிரங்கலாகப் " பொன் போலுங் கள்ளி " என்றெடுத்துக்காட்டிப் புகழ்ந்த.

† † கலை கற்றூர்—பொய்யா மொழிப் புலவர்.

(12-ம் பக்கத் தொடர்பு.)

"..................................தோற்றி யென்பேர்
மூட்டை யென வைத்து முதிர் சுரத்தைப் பாடுகெனத்
திட்ட முட னோர் வெண்பாச் செய்தோனும்"

"..வெருட்டியொரு
வேடுவனு யோர் புலவன் வெண்பாவைக் கைக்கொண்டு
கோடு திரியுங் குறச் செட்டி"

(ஷ ஷ தணிகையுலா.)

"பாலைக்கே யடை கொடுத்து மொழிந்த போய்யா மோழியைப்
பழிக்குமொரு தமிழ்க் குதலைப் பசுங் குருந்தைப் புரக்க."

(—அந்தகக் கவிவீர ராகவ முதலியார்—சேயூர்-
முருகன் பிள்ளைத்தமிழ்—காப்புப் பருவம்.) (6)

என வரும் செய்யுட்களில், இச்செய்தியைத் தமிழ் நூலா சிரியர்கள் வியந்தோதியிருப்பதும் அறிஞர்கள் அறிந்து மகிழத்தக்கன.

குமரவேள், இங்ஙனம் தம்மை வலியவந்து தடுத்தாட் கொண்டு அருள் சுரந்து காட்சி தந்தமையை நினைந்து நினைந்து பெரு மகிழ்வெய்தி மார்க்கத்திலுள்ள சிவதலங் களை யெல்லாம் தரிசித்துக்கொண்டு, "நாரியிடப்பாகர்க்கு நஞ்சளித்த பாவியென்று, வாரியிடம் புகுதா வையை" சூழ்ந்த பாண்டிய நாட்டுச் சிவதலங்களில் ஒன்றுனதும், பகைவர் அணுகுதற்கரிய சிற்றரணும், பேரரணும் சூழ்ந்து வெற்றி மிக்க வேங்கைமார்பன் ஆட்சியிலிருந்து பின், பாண்டியன் உக்கிரப் பெருவழுதி அரசின் கீழ்ச்சிறந்த தும், மற்றொருகால் ஈழநாட்டுப் பராக்கிரமபாகுவின் சேனுதிபதியின் ஆளுகைக் குட்பட்டதும், சிவபெருமான் காளை வடிவங்கொண்டு 'திருச்சுழியல்' என்னும் ஸ்தலத்தில் சுந்தரமூர்த்தி நாயனர் முன் தோன்றி "நம்முடைய

வாசஸ்தானம் கானப்பேர் அங்கு வருக" என்று சொல்லி அவரையும் அவருடனிருந்த சேரமான் பெருமாணுயனுரையும் வரச்செய்து தரிசனந் தந்தருளியதும்,

> "மானமா மடப்பிடி வன்கையா லலகிடக்
> கானமார் கடகரி வழிபடுங் கானப்பேர்"

எனத்தேவாரத்தாற் சிறப்பிக்கப் பெற்றதுமான கானப்பேரெனும் 'காளையார் கோயிலை' அடைந்தனர். இவர் காளையார் கோயில் சேர்ந்த சமயம் மாலைக்காலமும், நிசிவேளையு மானதால், பசியால் மிகவாடிக் 'கூத்தாள்' என்னும் தாசி வீடு சென்று தமக்குற்ற பசிப்பிணியை நிவர்த்திக்குமாறு தெரிவிக்க, அவளும், அவள் தமக்கையும், தாயும், பாட்டியும், பூர்வத்திற் செய்த பாவத்தினுல் குருட்டுத்தன்மையை அடைந்திருந்ததினுல் புலவரை இன்னுரெனத் தெரிந்து கொள்ள மாட்டாமல் நீவிர் யாவரெனக் கேட்டனள். புலவர் பொய்யா மொழி யென்றனர். கூத்தாள் பெரிதும் அதிசயித்து நெடுநாள் விரும்பித் தவங்கிடந்து எதிர் பார்த்திருந்த தொரு அரிய பொருள் திடும்பிரவேசமாய் வலுவில் தம் வீடு தேடி வருமாயின், அதனைக் காண்பானுக்கு எவ்வளவு வியப்பும் ஆனந்தமும் உண்டாகுமோ அதினும் பன் மடங்கு சந்தோஷங்கொண்டு புலவரைத் தக்கபடி உபசரித்து விருந்திட்டு அவர்பாதங்களில் சாஷ்டாங்கமாக நிலந்தோயப் பன் முறை வீழ்ந்து தன்னுடையவும், தன்முன்னேருடையவும் ஆகிய குறையைக் கூறி முறையு மிட்டிரந்தனள். புலவர் விஷய முணர்ந்து அவர்கள் விஷயத்தில் மனதிரங்கி,

"கூத்தாளென்னும் பெயருடைய இவள் கண்கள் நீண்டதான கூரிய வேல் போல் ஆகுக; கூத்தாளுக்கு

மூத்தவள் கண்கள் முழுத்த நீலோற்பல மலர்போல் ஆகக் கடவன; இம்மூத்தாளின் தாயாகிய இவள் கண்கள் தாமரை யென மலர்க; பாட்டியின் கண்கள் அம்பென மிளிர்க;" என்னும் கருத்துத் தோன்ற :—

"கூத்தாண் முகத்திரண்டு கூர்வேல்கள் கூத்தாடன்
மூத்தாண் முகத்தின் முழுநீலம்—மூத்தாடன்
அன்னை முகத்தி லரவிந்த மன்னைதன்
அன்னை முகத்திரண் டம்பு." (தமிழ் நாவலர் சரிதை 72).

என்று பாடி அவர்கள் கண்பெறச் செய்தனர்.

இங்ஙனம் பாடிய புலவர் வாக்கு விசேடத்தால் அந் நால்வருக்கும் அக்ஷணமே குருடு நீங்கிக் கண்தெரிந்தன. கிழவிகளும், குமரிகளுமாகிய அந்நால்வரும் குருடு நீங்கப் பெற்றதினால் இயற்கை யழகு சிறந்து பொலிய அதனால் பேரானந்தப் பெருங்கடலுள் ஆழ்ந்து பொய்யா மொழிப் புலவரைப் பலவாறு புகழ்ந்து முன்னிலும் சிறப்பாகப் பன்மடங்கு உபசரித்துப் போற்றினர். இச்செய்தி அவ்வூரெல்லாம் பரவிக் கேட்போர்க்கு அதி சயத்தை விளைவித்தது. வரகவிகள் அருள்வாக்குப் பெறுவதால் செல்வம் சிறந்தோங்கு மென்பது மரபாதலாலும், ஔவைப் பிராட்டியார் அருள்வாக்குப் பெற்ற "அம்பர்ச்சிலம்பி" அளவற்ற தனம் பெற்றாளென் பதற்குக் கதை உண்மையாலும், கூத்தாள் முதலியோர் செயல்கள் காட்சிப் பிரமாணமாக விளங்குவதாலும், பெரியோர் அருள்பெறுதல் சிறந்த பேறுமெனக் கருதிக் காளையார் கோயிலிலுள்ள கணிகைமாதர் எழு பதின்மர் ஒருங்குகூடிப் புலவர் அருள் பெற்று அவரால் பாடல் பெறவேண்டி ஒவ்வொருவரும் 'ஆயிரம் பொன் வீதம்' எழுபதினாயிரம் பொன்கட்டி ஒரு பெரு முடிப்பாக

எடுத்து வந்து புலவர் பாதங்களில் காணிக்கையாக வைத்து வணங்கித் தங்கள் கருத்தை வெளியிட்டனர். பொய்யா மொழியார் அவர்களது வேண்டுகோளுக்கும், ஆவலுக்கும் ஒருவாறிணங்கி அம்மங்கையரது அழகு, குலம், கொடை, கௌரவம் ஆகிய இவை யெல்லாம் நன்கு விளங்கும்படி,

"வாசனை பொருந்திய தாமரைமலரில் வசிக்கின்ற இலக்குமியை ஒத்த அழகுடையவரும், காளையார் கோயி லென்னும் தலத்தில் எழுந்தருளி விளங்கும் சிவபெரு மானுக்குரிய மக்களெனச் சிறப்பித்துச் சொல்லப்பட்ட வருமான (உருத்திர கணிகையர்) எழுபது பெயர்களும் உலகத்தில் யாசிக்கப்பட்டவர் கைகளின்மேல் தமது கைகளை நீட்டுவார்கள். உலக பரிபாலனஞ் செய்யும் அரசர்களின்மேல் தமது கால்களை நீட்டுவார்கள்" என் னுங் கருத்துத் தோன்ற :—

"வாச மலர்மடந்தை போல்வார்வண் கானப்பேர்
ஈசன் றமர்க ளெழுபதின்மர்—தேசத்
திரவலர்மே னீட்டுவர்கை யீண்டுலகங் காக்கும்
புரவலர்மே னீட்டுவர் பொற் கால்."

(தமிழ் நாவலர் சரிதை 66)

என்று பாடிக்களிப்பித்தனர்.

பின்னர் அங்கு நின்று நீங்கி, "முளரிமங்கை, சரண் மாறை வாணன் றமிழ்த்தஞ்சை" (19) "வறியோர் கவர, முத்துந்துகிரு மிரங்குந் தரங்க முகந்தெரிந்து, தத்துங் கரைவையை சூழ் தஞ்சை" (26)

"இம்பரம்பொன், வாருந்துறைவையை சூழ்தஞ்சை" (59)எனத்தஞ்சைவாணன் 'கோவையில்' புகழ்ந்து கூறிய இலக்கியத்திற் குறைவிடமானதும்,மதுரைச் சொக்கநாதர் அறுபத்து நான்கு திருவிளையாடல் புரிந்து, சம்பந்த

மூர்த்திகள் நீரிலிட்ட தேவாரம் எதிரேறிக் கரைவந்த வைகை நதி யடுத்ததுமான மாறைநாட்டுத்* தஞ்சாக்கூரில் "உயர் பாவலர்க்கு, வாரணங்கோடி தருதஞ்சைவாணன்" (2) "நாவலர்க்குத், தானக்களிறு தரும்புயல்வாணன்" (17) "சொற்புலவோர், மாதாக வன் பசிதீர்த்தருள்வாணன்" (414) "செந்தமிழோர், தங்கணிடும்பை தவிர்த்தருள்வாணன்" (421) எனப் புகழ்ந்தோதப் பெற்ற தஞ்சைவாணனது தமிழபி மானத்தையும், புலவர்க்கீயும் கோடைச்சிறப்பையும் கேள்வியுற்று அவ்வள்ளல் பெருந்தகையைக் கண்டுகளிக்க அங்குச் சென்றனர். அவ்வாணர் பெருமான், உயர்குடி வாழ்வினனும், உழுவித்துண்ணும் வேளாண் மரபினனும், சந்திரன் என்பானின் தவப்புதல்வனும், தமிழ்க்கலை முழுதும் கைவரப் பெற்றவனும், பெருங்கொடை வள்ளலும், உத்தம நற்குண சீலனும், ஓங்கு புகழுடையானும், வணங்காமுடிப் பாண்டியன் அமைச்சனும், பகைவரை வெந்நிடச் செய்யும் தீரனுமாய் விளங்குவதைக் கண்டு அவனது அருமை பெருமைகட்கு மிக வியந்து அவனல் நன்கு உபசரிக்கப் பெற்று, அவன் வேண்டுகோளின்படி ஒரு பிரபந்தம் இயற்ற நினைந்தனர்.

தாமியற்றும் பிரபந்தம், எவரும் வியந்து புகழ்ந்து பாராட்டி உச்சிமேற் கொள்ளுந் திறத்தில் அமைந்திருக்க வேண்டுமெனக் கருதித் தமக்கு முன்னம் தமிழகம்புகழ விளங்கியவரும், "புளியங்குடி"யிற் பிறந்த 'உய்யவந்தார்' என்பார் குமாரரும், சைனசமயரும், ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், ஆகிய நாற் கவிகளிலும் வல்லவரானதுபற்றி "நாற்கவிராசநம்பி" என்னும் காரணச் சிறப்புப் பெயர் பெற்று 'நம்பி' என்னும் இயற்பெயருடைய புல

* இது சோழநாட்டுத் தஞ்சையினும் வேறனது.

வர் திலகர், அகப்பொருளின் விரிவைச்சுருக்கி அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல் ஒழிபியல், என ஐந்து இயல்பினையுடையதாய்ச் சுருங்கிய நூலாகத்தம்பெயரில் "நாற்கவிராசநம்பி அகப்பொருள்" என்னும் பெயரில் இயற்றியருளிய அகப்பொருள் விளக்கத்திற்கு இலக்கியமாகத் தஞ்சை*வாணனைப் பாட்டுடைத் தலைவனகக் கொண்டு அவன் பெயரில் "தஞ்சைவாணன் கோவை" என்னும் பெயரில் 425 கலித்துறைப் பாவினத்தில் அரிய நூலொன்றியற்றி யருளினர். இக்கோவையின் அருமை பெருமைகளும், ஆற்ளெழுக்கான போக்கும், அமுதமயமான சொல்லும், அளக்கமுடியாத பொருளும் அறிஞரெல்லாம் அறிந்து மகிழத்தக்கன. சுருங்கக் கூறின், தில்லையில் திருவாசகமருளிய மணிவாசகப் பெருமான் திருவாய்மலர, ஸ்ரீ நடராஜமூர்த்தி திருக்கரங்கொண்டு வரைந்தருளிய "திருச்சிற்றம்பலக்கோவைக்கு"ப் பின்னிட்ட கோவைகளொன்றும் இதற்கிணையாகா. அக்கோவையில், "வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன்" (7) "நேரியர்கோனகங் கோடவங்கைச், சிலைகால் வளைத்துத் திருத்தியவாணன்" (53) "மீனவர்தம் செங்கோன்முறைமை செலுத்திய வாணன்" (55) "தேன்

* இவன் இயற் பெயர் தெரியவில்லை. இவன் பாண்டியனுக்குச் சேனாதிபதியாகவும், அமைச்சனுகவும் இருந்தவன். இவன் "வல்லத்தமர்வென்றவன்" (251) என்றும், "கன்னடர் மண்கொண்டவன்" (356) என்றும், "மல்லையம் போர் வென்ற வாணன்" (83) என்றும் கோவையால் அறியப்படுகின்றன. கி. பி. 1588-ல் பட்டந் தரித்த வீரபாண்டியனும், வல்லமெறிந்தவனென்று தென்காசிக் கல்வெட்டொன்றுல் தெரிகிறது. ஆனால், பொய்யா மொழிப் புலவரைப் பாராட்டியுள்ள அருணகிரிநாதர் 15-ஆவது நூற்றாண்டிலிருந்திருப்பதால் தஞ்சைவாணன் கோவையிற் சொல்லப்பட்ட பாண்டியன் வேறுதல் வேண்டும்.

னன், தன்னைப்பணிந்து குற்றேவல் செய்யாது சமர்க் கெழுந்த மன்னைப் புறங்கண்டவாணன்" (359) வேளாண்மை மரபுவிளக்கிய வாணன்" (382) என அவனது பராக்கிரமத்தையும், "விசயக்கொடிமேல், வாங்கிய சாப முயர்த்த வன்போர்வென்ற வாணன் வையந்தாங்கிய மாலனையான்" (5) எதிர்ந்தவொன்னார், மன்மலைவேழந் திறைகொண்ட செய்தஞ்சைவாணன்" (16) "எதிர்ந் தாரை வென்று, மைவாரணங் கொண்ட வாணன்" (258) என அவனது வீரத்தையும், "சுழிநீரலைகடற் றேரல் லுலகேழினுந் தோற்றும் வண்மைக் கழிநீடுமாடக மேரு வின் மீதினுங் காவல் கொண்டு, வழிநீள் புகழ்கொண்ட வாணன்" (80) "பனிவரைமேல், திலகம் பதித்தெனச் சேல் வைத்த வாணன் றென்மாறை மன்னன், உலகம் பயில் புகழ் போல்" (234) எழுபார், மருவெண்டிசை புகழ் வாணன்" (240) என அவனது புகழையும், "குறியோ னிருந்த, மலைபயில் வார்தமிழ் வாணன்" (109) சிறந்தவர் தெரிந்த செழுந்தமிழ் வாணன்" (145) மலயாசலத்தமிழ் தேர் வாணன்" (147) என அவன் தமிழ்ப்பயிற்சியையும், நன்கு புகழ்ந்திருப்பதால், அக்கோவைக்குரிய பாட்டுடைத்தலைவன், புகழ்தற் குரிய அமிசங்களிற் சிறந்து, "பொன் மலர் நாற்றமுடைத்து" என்னும் பெருமைக்கும் உறைவிடமானது புகழ்ந் தோதத் தக்கதன்றோ? இத்தகைய அற்புதமும், அழகும் பொற்புடன் விளங்கப் புலவர்களுக்கு நல்விருந்தாய்ச் சமைந்த கோவையின் சிறப்புக்குத் தஞ்சைவாணன் மிகவும் அதிசயித்து மெத் தவும் மகிழ்ந்து பொய்யா மொழியாரை அருமைமிகப் பாராட்டிக் 'காளிதாசன்' சுலோகங்களுக்குப் 'போசன்' மகிழ்ந்து அக்ஷரத்திற்கு லட்சம் பொன்னளித்ததுபோல், இக்கோவையை அரங்கேற்றச் செய்து பாடலொன்றுக்

குப் பொன்னாற்செய்த தேங்காய் ஒவ்வொன்று பரிசளித்துப் புலவரை மகிழ்வித்தன னென்ப. இதனைப் பாண்டி மண்டல சதகத்தாரும், புலவர் புராணமுடையாரும், தத்தம் நூல்களில் எடுத்தாண்டிருப்பது உண்மையை வலியுறுத்தும் ஆதாரமாகக் காண்கின்றன. அப்பாடல்கள் அடியில் வருமாறு :—

" ஒருகவிக் கோரொரு தேங்காய் பொன் னாற்செய் தருட்டிக்கல்வி
பெருகச்செய் நாவலர் வாழக் கொடுத்துப்ர தாபம் பெற்றோன்
திருமலி தஞ்சையிற் கோவைத் தமிழ் கொண்டு செல்வமிக
வருதரு வாகிய வாணனும் பாண்டியன் மண்டலமே."

" பொருவாதுயர் சுவைதோயகப் பொருட்கோவை சொலிடலு
மொருபாடலுக் கம்பொன்னொடு தேங்காயள வொப்பப்
பெருகார்வமொ டுதவிப்பிற பொருளும்பல பெய்தா
னருகோர்துணை யில்லானவை கொடுவீதி யணைந்தான். (8)

இனி, புலவர் பாண்டியனை முதன்மையாகக் கொண்டு கலைந்த சங்கத்தை மறுமுறை கூட்டச் சங்கற்பித்துவந்த தமது கருத்தைப் பாண்டியர்க்கு மந்திரியும், படைத்தலைவனுமான தஞ்சைவாணனுக்கு எடுத்துரைத்து அவனால், அதற்குரிய உதவியுடன் மதுரையடைந்து அரசனைக்காண வேண்டி அரண்மனை செல்ல, அரசன் ஆலவாயண்ணலை அடிபணியச் சென்றிருப்பதாக உணர்ந்து நேரே அக் கோயிலை யடைந்தனர். அங்கே பாண்டியன் ஆலயத்தின் திருமுன்னர்த் தண்டாகாரமாய் விழுந்து கடவுளை வணங்குகின்ற நிலையைப்பார்த்து,

" வணங்காமுடிப் பாண்டியனே ! உன் குலம் குழலான தண்டையுடைய தாமரைமலர்கள் வாய் குவியவும், முறுக்கவிழ்ந்து அல்லிமலர்கள் வாய்மலரவும், நிலவைக் கக்குகின்ற சந்திரகுலம் நீயே என்று சொல்லத்தக்க நின்

குலமுதல்வனாகிய அச்சந்திரனே,செவ்வான மேனியனாகிய சிவபிரானுடைய தீக்கொழுந்துபோற் பிரகாசிக்கின்ற சடையின் மேலே இருப்பதை நீ அறிந்திருந்தும், அக்கடவுளின் வீரக்கழல் புனைந்த பாதங்களை வணங்குகின்றனையே" (இது தகுதியோ) என்னுங் கருத்தமையப் பாதிவசையும், நசையுமாக :—

கலித்துறை.

"குழற்கா லரவிந்தங் கூம்பக் குமுதம் பொதியவிழ்ப்ப
நிழற்கான் மதியமன் றோநின் றிருக்குல நீயவன்றன்
அழற்கா லொளிர்சடை மீதே யிருந்துமவ் வந்திவண்ணன்
கழற்கால் வணங்குதி யோவணங் காமுடிக் கைதவனே."

(தமிழ் நாவலர் சரிதை.)

என்னும் பாடலைக்கூறினர். பொருளழகும், சொற்பொலிவும், ஓசையின்பமுங் கொண்ட விற்பனமிகுந்த கற்பனைக்கவியைக் காது குளிரக்கேட்டு வியந்தசிந்தையனாய், வனப்பமைந்த இத்தகைய செய்யுளைக்கூறிய புலவர் யாவரென அருகிலழைத்து விசாரித்தபோது பொய்யாமொழிப் புலவர், தமது ஊர், பேயர்,முதலியன வுரைத்து மும்முறை கூடிக்கலைந்த தமிழ்ச் சங்கத்தை மீண்டும் புதுப்பித்துத் தமிழ் வளர்ச்சி செய்விக்கவேண்டுமென்னும் காரணமே தாம் இங்கு வந்ததென்று தெரிவித்தனர். இது கேட்ட பாண்டியன், தெய்வப்புலமை வாய்ந்த அச்சங்கத்தைக் கூட்டல் சிற்றறிவினராய நம்மால் ஆவதோ?" என்று கற்பூரவிலையறியாத உப்புவணிகனைப்போல், புலவர் தம் அருமை பெருமைகளை யுணராது கூற, புலவர் பாண்டியனை நோக்கி, அத்தகைய விஷயத்தில் என்னைப் பரிசோதித்துத் தக்கவன், தகாதவன் என்பதைத் தெரிந்து கொள்விராக என்றனர். வழுதி ஆயின், கடைச்சங்கமிருந்து தமிழா

ராய்ந்த சங்கத்தாரது திருவுருவங்கள் இதோ! காணப்படு கின்றன, அவ்வுருவங்களை நோக்கி நீர் ஒரு பாடலிசைக்க, அவ்வுருவங்கள் உம்மைத் தம்மோடொத்த புலவரென அங்கீகரித்துச் சிரக்கம்பஞ் செய்யுமேல், நீர் சங்கம் தாபித்துத் தமிழ்வளர்க்கத் தக்கவர் தாம் என்றனர். உடனே புலவர், விக்கிரக வடிவாய சங்கப் புலவரை நோக்கி,

" இதழ் விரிந்த பூமாலையை அணிந்த நாற்பத்தொன்பதின்மரே! உங்களிலே யானொருவன் ஒப்பாவேனோ! அல்லது ஒப்பாக மாட்டேனோ? சந்திரகுலத்து வேந்தனாகிய இவ்வணங்காமுடிப் பாண்டியன் அறியச்சொல்லுங்கள். நீங்கள் சங்கத்திற் பாடுகின்ற முத்தமிழ்ப் பாடல்களுக்கு இப்பொழுது யான் பாடுகின்ற பசுந்தமிழ்ப் பாடல்களும் ஒத்திருக்குமோ! சொல்வீராக" என்னுங் கருத்தமைய :—

வெண்பா.

" உங்களிலே யானொருவ னொப்பேனோ வொவ்வேனோ
திங்கட் குலனறியச் செப்புங்கோள்—சங்கத்துப்
பாடுகின்ற முத்தமிழென் பன்னூலு மேற்குமோ
ஏடவிழ்தா ரேழெழுவீ ரின்று." (தமிழ் நாவலர் சரிதை 64.)

என்றுபாட, அப்புலவர் சிலையுருவங்க ளெல்லாம் ஒருசேரச் சிரமசைத்தன. அரசன் பெரிதும் வியந்து மீண்டும் சோதிக்கவெண்ணிப் புலவருடன் பொற்றாமறைக் கரையடைந்து, " இப்பொய்கையில்தான் முன்னமிருந்த சங்கப்பலகை மறைந்து கிடப்பதாகக் கூறுகின்றனர். அது மேலெழுந்து மிதக்குமாறு உமது கவித்திறத்தை விளக்குவீரேல், கருதிய கருமம் கைகூட்டுவல்" என்று சொல்லப் பொய்யா மொழியார் அங்ஙனமே ஆகுகவென்று, " தற்காலம் உலகத்தை யாளும் அரசர்கள், முன்

காலத்து வேந்தரைப் போல் தமிழை ஆதரிப்பவராக இருக்கவில்லை. என்றாலும், முற்காலத்து வித்வான்களைப் போல் இக்காலத்தும் வித்வான்க ளிருக்கிறார்கள் என்னுந் தன்மையால், சக்கரவர்த்தியாகிய வணங்காமுடிப்பாண்டியன் அறியும்படி மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் கௌரவங் கொள்வதற்குக் காரணமாயிருந்த பலகையே சற்று மிதப்பாயாக " என்னுங்கருத்துப்பட :—

* பூவேந்தர் முன்போற் புரப்பா ரிலையன்றிப்
பாவேந்த ருண்டென்னும் பான்மைதான்—மாவேந்தன்
மாற னறிய மதுரா புரித்தமிழோர்
வீற்ணையே சற்றே மித. (தமிழ் நாவலர் சரிதை 65.)

எனப்பாடுதலும், சங்கைப்பலகை மிதந்தெழுந்து அரசன் காணுமாறு தரிசனந்தந்து மறைந்தது. இச்சம்பவங்களைக் கண் கூடாகக் கண்ட பாண்டியன் பெரிதும் வியந்து மகிழ்ந்து புலவர்பால் தானறியாது நடந்து கொண்ட குற்றங்களை மன்னிக்குமாறு வேண்டி, பொய்யாமொழியாரை நோக்கி! " நீர் ஒருநல்ல புலவர் " என்று அவர் தெய்வப் புலமையைப் பலவாறு புகழ்ந்து கூறினன். அதுகேட்ட புலவர்,

" தக்ஷிணாமூர்த்தி வடிவங்கொண்ட சிவபிரான் மதுரை முதற் சங்கத்தில் இறையனார் என்னும் பெயருடன் விளங்கிய கடவுளும் புலவர், அறம் பொரு ளின்பம் என்னும் முப்பாலின் விதியுரைத்த திருவள்ளுவரும் புலவர், குமரவேள்பால் தமிழ்கேட்ட அகத்தியரும் புலவர்,

---

* இச்செய்யுளின் கண்ணுள்ள " மதுராபுரித்தமிழ் " என்னுந் தொடர்பு இவர் பாடிய " மதுராபுரித் தமிழ் தேர்வாணன் மாறை வனந்து வந்நே " என்னும் தஞ்சைவாணன் கோவையிலும் பயின்றமை காண்க.

அவர்களோடு சமப்படுத்தி என்னையும் புலவனாகக் கூறியது இவ்வையம் தாங்குமோ! தாங்காது” என்னுங் கருத்துத்தோன்ற :—

A. No. 4919 33214 நூலகம், கோ…

வெண்பா.

* “அறமுரைத் தானும் புலவன் முப்பாலின்
திறமுரைத் தானும் புலவன்—குறுமுனி
தானும் புலவன் றரணி பொறுக்குமோ
யானும் புலவ னெனில்.” (தமிழ் நாவலர் சரிதை 73.)

என்று கூறினார்.

என்னே! இவர் பெருந்தன்மை. மெலியது மேலெழச் செல்லச் செல்ல வலியதன்றோ தாழுந்துலைக்கு” என்பது இவரளவில் மெய்யென்பது பெறப்பட்டது.

இங்ஙனம், தமது தெய்வப் புலமையாலும், சீரிய ஒழுக்க நலத்தாலும், பாண்டியன் மனங்கவர்ந்து தவறிய சங்கம் தழைத் தோங்கும் வகையில் பெரிதும் முயன்ற நமது தெய்வக்கவிஞர், பாண்டியன் அநுமதிபெற்றுத் தமிழ்ச்சங்கம் கூட்டினா ரென்பதற்குப் போதிய ஆதாரமொன்றுங் காணப்படவில்லை.

முச்சங்கங் களுக்குப்பின்னர், மதுரையில் சிலசங்கங்கள் கூட்டப் பெற்றிருந்தன வென்பதற்கு விக்ரமசகம் 526-ல் (கி. பி. 470) ‘பூஜ்யபாதர்’ என்பார் மாணாக்கருள்

---

* இவ்வெண்பாவில், ‘அறமுரைத்தான்’ என்றது “ஆலமர நீழ லறநால்வர்க் கன்றுரைத்த—ஆலமமர் கண்டத்தான்” என முதற்றிருவந்தாதியிலும், “அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ” எனத் திருவாசகத்திலும் வருவனவற்றால் தக்ஷிணாமூர்த்தியாகிய சிவபிரானை யுணர்த்தி ஈண்டு முதற்சங்கப் புலவராய் வீற்றிருந்தருளிய இறையனார் என்னும் மாத்திரையாய் நின்றது.

ஒருவராகிய 'வச்சிரநந்தி' என்பவரால் தென்மதுரையில் ஒரு திராவிடசங்கம் கூட்டப் பெற்றதென்னும் செய்தி "திகம்பரதேரிசனம்" என்னும் ஜைனமதக் கிரந்தத்தில் காணப் படுவதாகச் சிலர் கூறுகின்றனர். இங்ஙனம் கூற வந்தவர், திகம்பரதரிசனம் என்னும் நூல் யாரால் செய்யப் பட்டது? செய்வித்தோர் யாவர்? எக்காலத்துச்செய்யப் பட்டது? பிரமாண நூலா? அன்று? என்பதாதிய விஷயங் களை விளக்காமலும், அதினின்றும் இரண்டோர் ஆதாரங் களைக் காட்டாமலும், பொதுப்பட நூலின் பெயரைமட் டும் குறித்து நின்றது உசிதமாகக் கொள்வதற்கில்லை. ஒரு விஷயத்தைப் பலர்முன் துணிந்தெழுத முன்வந்தவர் அதற்கேற்ற ஆதாரங்காட்டா தொழிவது சிறந்ததாகு மோ? ஆதாரமற்ற தொரு விஷயத்தை எவரும் தழுவச் சங்கிப்பரன்றோ? ஆனதால், இவ்விஷயம் பொருத்த மானதாகக் கொள்வதற்கில்லை. 'சைனசங்க மேன்று' பொதுப்படமட்டும் குறிப்பதால், அதிற்கலந்த புலவர்கள் பௌத்தர், ஜைனர், பிராமணர், சூத்திரர் எனப்படும் அவ ரவர் ஜாதிவேற்றுமை, மதவேற்றுமைகளைக் கவனியாது, தமிழபிவிர்த்தி யொன்றையே பிரதானமாகக் கருதிப் பாண்டியன் அவைக் களத்தே கூடியவராக நம்புதற் கில்லை. ஜைனகூட்டத்தார், அவர்கள் மதம் பரவுவதற் கும், பழக்க வழக்க வொழுக்கங்களைத் திருத்துதற்கும், அவர்களுக்கு வேண்டிய நூல்களை இயற்றுதற்கு மாத் திரமே கூட்டிக்கொண்டிருக்க வேண்டுமென யூகிக்க வேண்டியிருக்கிறது. இது ஜைனர்க்கு வேண்டிய சங்க மன்றித் தமிழ்ச் சங்கமாகாது.

இனி, ஸ்ரீ சடகோபர் காலத்தே மதுரையில், ஒரு சங்கம் இருந்ததாகவும், அது முந்நூற்றறுவர் அடங்கிய

தென்றும், அச்சங்கத் தார்க்குப் பொருள்காணும்படி ஆழ்வார் விடுத்த பாசுரம் "அண்டகோளத்தா ரணுவாகி" என்று தொடங்கும் அகவல் என்றும், அச்சங்கத்தை ஆழ்வார் மானபங்கப் படுத்தியதாகவும், ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரைகளாலும், "சுவடிறக்க" என்னும் சடகோபரந்தாதிச் செய்யுளில், "சங்கக் குவடிறக்குத்திய மாறப் பெயர்கோலையானை" எனக் கம்பர் கூறுவதாலும் இச்சங்கத்தின் உண்மை விளங்குமெனவும், இங்ஙனம் ஆழ்வார் காலத்துச் சங்கமே பொய்யாமொழிப் புலவரால் கூட்டப்பெற்ற தெனவும், அப்புலவரைத் தலைமையாக வுடைய கூட்டத்திலேயே திருத்தக்க தேவரால், சிவகசிந்தாமணி அரங்கேற்றப் பெற்றதெனவும் ஊகிக்க இடமுண்டெனச் செந்தமிழ் மாஜிப் பத்திராதிபர் ஸ்ரீமத் மு. இராகவையங்கார் சுவாமிகள் கூறுகின்றனர். இவர் சரித்திரங்களை நுணுகி யறியுந்திறனும், ஆராய்ச்சி வண்மையும், சிக்கலாயுள்ள சரித்திரங்களில் ஊடுருவிச் சென்று ஊன்றிப் பார்த்து உண்மை யுணரும் உபாயமு முடையாரெனத் தக்கோரா லறியப்படுவதால், இவர் யூகம் பொருத்த முள்ளதேயாம். எனெனில், *"வஞ்சிப் பொய்யா மொழிப் புகழ் மையறுகாட்சித் திருத்தகு முனிவன்" என நச்சினார்க் கினியர் உரைப் பாயிரத்தில் வருவதாலும், அச்சிந்தாமணி மதுரைச் சங்கத்தே அரங்கேற்றப் பெற்றதாகக் கதையுண்மையாலும், அச்சங்கமும் கடைச்சங்கமன்றென்பது பின்னுளோர் செய்த சிந்தாமணி † என நச்சினார்க்கினியர் கூற்றால் விளங்குதலாலும் மேற்குறித்த யூகம் பொருத்த முடைத்தாதல் காண்க.

---

* வஞ்சிப் பொய்யா மொழியா ரென்றிருப்பதால் இவரூர் வஞ்சி யெனும் கருவூராயிருக்கலாம் போலும்.

† தொல்காப்பியம் செய்யுளியில் நச்சினார்க்கினியம் "பாநிலை வகையே" என்னும் சூத்திரவுரை.

இனி, நமது பொய்யா மொழிப் புலவர், மங்கலப் பாண்டிவள நாடாகிய மதுரைமா நகரம் நீங்கி,

"மன்ற வாணன் மலர்திரு வருளாற்
தென்றமிழ் மகிமை சிவணிய செய்த
வடியவர் கூட்டமு மாதிச் சங்கமும்
படியின் மாப்பெருமை பாவுறு சோழனுஞ்
சைவமா தவருந் தழைத்தினி திருக்கு
மையறு சோழ வளநாட்" டுள்ள தஞ்சைமா

நகரம் வந்ததற்குக் காரணந் தெரிந்துகொள்வதற்கில்லை. இவர் பாண்டியநாடு நீங்குமுன், காளையார் கோயிலில் முன்னமே தம்மால் பாடப்பெற்றுக் குருடுநீங்கிப் பெருஞ் சம்பத்தெய்தி யிருக்கும் கணிகையரை மீண்டும் கண்டு செல்வோமெனக் கருதி அவர் வீட்டை யடைந்தனர். கதவு தாளிட்டிருப்பதைக் கண்டனர். இவர் சென்றது அகாலமானதால் நித்திரையிலிருக்கக் கூடுமென்றெண்ணித் தங்குரல் காட்டிக் கதவிடித்தனர். கணிகையர் போகூழாலோ, ஐஸ்வர்ய கருவத்தாலோ, மற்றியாது காரணத்தாலோ தெரிந்தும், தங்களுக்கியற்கையாயமைந்த அற்ப குணத்தால் கதவு திறவாமல் மௌனஞ் சாதித்தனர். "குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்தலரிது" ஆதலால், புலவர்க்குச் சினமெழ, "பழைய குருடிகாள்! கதவு திறவுங்கள்" என்று கூறினர். பொய்யாமொழியார் என்னும் தன் பெயருக்கேற்பவும், "நிறை மொழிமாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்" என்னும் உண்மைக் கொப்பவும், அந்நிமிஷமே அந்நால்வர் கண்களும் முன்போல் குருடுகளாகின. சொல்லம்புபோல் ஒல்லையிற் பாய்ந்து கொல்லும் வில்லம்பும் உண்டா? அகம்பாவமும் செய்ந்நன்றி மறந்ததுமே இப்பழிக்குக் காரணமென்

றுணர்ந்து தமது பேதைமைக்குப் பெரிதும் வருந்தி மன்னிப்புக் கேட்டுக்கொண்டன ரென்ப. "பழைய குருடி கதவு திறவடி" என வழங்கும் பழமொழி அதன் பின்னரே வழங்கியதெனக் கூறுவர்.

முன்னம், தஞ்சைமா நகரம், காவிரி நீர்ப்பெருக்கால் பயிர்வளஞ் சிறந்து நெற்களஞ்சிய மென்னும் பெயரோங்கிச் சோழவளநாடு சோறுடைத்தென்னும் பெருமைக்கும் உறைவிடமாய்ச் சிறந்திருந்தது. அப்போது சோழராதிக்கம் தஞ்சையில் பிரபலம் பெற்றுப் புகழோங்கியிருந்ததால், நகர் வளம் நலம் பெற்றேயிருந்தது. நமது புலவா தஞ்சையைச் சேர்ந்தபோது அக்காலத்து இனிமையுடைத்தென்னும் தனித்தமிழ்ன் இஞ்சுவையை உள்ளபடி உணர்ந்தவனும், தஞ்சையினின்றும் தற்காலத்துத் திருவையாற்றுக்குச் செல்லும் இடையிலுள்ள சிற்றரசூர், பேரரசூர், தேன்மாவை, பூந்துருத்தி, கோத்தமல்லி, கண்டி, கருகாவூர் என்னும் எழூர்களுக்குத் தலைவனும், சோழனது அமைச்சர்களில் ஒருவனும், சீமானும், பெருங்கொடை வள்ளலுமாகிய "சீநக்கன்" என்னும் செல்வர், புலவர் போற்றும் புகழாளனெனக் கேட்டனர். அத்தகைய தமிழறி வள்ளலை அவசியம் கண்டுகளிக்க வேண்டுமென அவாமேற்கொண்டு அப்பிரபுவதியும் நற்றலமாகிய அரசூர்க்கு வழிக்கொண்டனர். பிரபு புலவரின் அருமை பெருமைகளைக் கேள்வியான் முன்னமே அறிந்திருந்தாரானதால், இவர் வருகையில் மெத்த மகிழ்ந்து, மலர் முகங்காட்டி எதிர் கொண்டழைத்துப் பெரிதும் உபசரிக்குமுன், புலவருக்கு விருப்பும், உவப்புமான இனிய புளியஞ்சோற்றை முதலில், இவருக்குப் படைக்கும்படி உத்திரவிட்டு அது முடிந்தபின் பிரபுவும், புலவரும்

அளவளாவி இனிது சம்பாஷித்திருந்தனரென்ப. பொய்யா மொழிப் புலவர் புளியமுதருந்தி அதன் அருமைக்கு இனிய பாடலொன்றிசைத்தனர். அது வருமாறு :—

கலி விருத்தம்.

" அளிகொ ளுந்தொடை யானர சைக்குமன்
ஒளிகொள் சிநக்க னின்றுவந் திட்டசீர்ப்
புளியஞ் சோறுமென் புந்தியிற் செந்தமிழ்
தெளியும் போதெலாந் தித்தியா நிற்குமே."

(த. நா. சரிதை 57.)

(போ-உரை) " வண்டு மொய்க்கின்ற புதிய மலர்மாலை யணிந்த அரசூர்க்குத் தலைவனும், கீர்த்தியிற் சிறந்தவனு மாகிய சிநக்கப் பிரபு இன்று மனமுவந்தளித்த இனிய புளி யமுது என்னறிவில் செந்தமிழை ஆராயும் போதெல்லாம் தித்தியா நின்றது " என்பதாம்.

இங்ஙனம், சிநக்கன் பொய்யாமொழிப் புலவருக்குப் புளியமுது நல்கியதைப் புலவர் உவமைமுகத்தால் செந் தமிழ்ச்சுவை தெளியும் போதெல்லாம் புளியஞ்சோற்றின் சுவை, அதற்கேற்ற உவமானமாக ஞாபகத்திற்கு வருகின்றது என்று புகழ்ந்தாற்போல், சிலப்பதிகார முதலிய நூல்களுக்கு உரை வகுத்த அடியார்க்கு நல்லாரும் தம்மை அபிமானித்துக் காத்த "பொப்பண்ண காங்கேயர்" என்னும் ஒரு உபகாரியை,

" காற்றைப் பிடித்துக் கடத்தி லடைத்துக் கடியபெருங்
காற்றைக் குரம்பைசெய் வார்செய்கை போலுமக் காலமெனுங்
கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கேயர் கோனளித்த
சோற்றுச் செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை சொல்வித்ததே"

என மனதாரப்புகழ்ந்து தமது நன்றியறிதலை வெளியிட் டனர். இது உத்தமர் தம் கடமைபோலும்.

இவ்வாறு சீநக்கன் பொய்யா மொழிப் புலவருக்குப் புளியமுதிட்ட வரலாற்றைச் சோழமண்டல சதகமுடையாரும், தமது சதகத்தின் 54-ம் செய்யுளில் :—

"பொய்யா மொழியார் பசிதீரப் புளியஞ் சோறு புகழ்ந்தளித்த
செய்யா ரரதூர்ச் சீநக்கர் செய்தசெவருஞ் செய்தாரோ
கையாருதவி பொறையுடைமை காணியாளர் கடனன்றே
மையார் புவியில் முதன்மைபெற்றோர் வளஞ்சேர் சோழமண்டல
[மே.

என எடுத்தாண்டிருப்பது இவ்வாலாற்றின் உண்மையை விளக்குதற்கு போதிய ஆதாரமாகக்காணப்படுகிறது.

இங்ஙனம் தமது குறிப்பறிந்து உபசரித்து மகிழ்வித்த பிரபுவின் அருஞ்செய்கைக்குப் புலவர் மிகவும் அதிசயித்துக் கூரியஅறிவின் திறத்தைப் பலபடப்புகழ்ந்து இத்தகைய் பேரறிவும், பெருங்கல்வியுங்கொண்ட நல்லறிஞரிடத்து நேசம்வைப்பதுதான் அறிவுடைமையின் அதிர்ஷ்டமென்று தீர்மானித்து அதுமுதல் சீநக்கவள்ளலுடன் உடலும், உயிரும், மலரும், மணமுமென பிரியாவுறவு கொண்டு அன்பு பெருக்கி வந்தனர். இவர்கள் அன்பும், பிறை மதிபோல் நாளும் பெருகிக் கற்றறிந்தார் கேண்மையின் அடிக்கரும்பு இனிமையொப்பச் சிறந்துவந்தது. இங்ஙனம் நிகழ்ந்து வருமிடையில், அப்போது தஞ்சைமாநகரைச் சீரும் சிறப்பும்பெருகச் செங்கோலோச்சிவந்த இராஜேந்திர சோழனைக் கண்டுத் தமது கல்வித்திறமை காட்டிப் பரிசுபெற வேண்டுமெனக் கருதித் தமது கருத்தைக் கண்போன்ற சீநக்கப் பிரபுவினிடம் அறிவித்தனர். பிரபுவும், புலவர் விரும்பியவாறு சோழ வேந்தன்பாற் பொய்யா மொழியாரைக் கூட்டிச் சென்று அறிமுகம்

செய்து வைத்தனர். புலவர் சோழனைத் தரிசித்த போது :—

வெண்பா.

" இறையின் முறைகொணர்ந்த தெவ்வரெல்லா மீண்ட
இறையு மிறைகடக்க லாகா——அறைகழற்காற்
போர்வேந்தர் போர்மாளப் போர்வா ளுறைகழித்த
தேர்வேந்தன் றஞ்சைத் தெரு"

(தமிழ் நாவலர் சரிதை 68.)

எனத்தாம் அவன் நகரில்கண்ட சிறப்பைக்கூறினர். இப் பாடலைக் கேட்டும், மற்றும் புலவரது கலா விநோதங்களை யும், கவியருமைகளையும் தமது அமைச்சனாகிய சீநக்க னால் சொல்ல வறிந்தும், மெத்த மகிழ்ந்து சோழன், புல வர்க்குப் பெருவரிசை யளித்து விடைதரப் பொய்யா மொழி யார், சீநக்கனுடன் அரசூர் சேர்ந்து பழைமைபோல் அன்பளாவி :—

" தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையா
ரிகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல் வானத்
தும்ப ருறைவார் பதி." (நாலடியார்.)

என்னும் செய்யுளுக்கு இலக்கியமாய் இனிதுறைந்து வந் தனர்.

இராஜேந்திரசோழன், பொய்யா மொழியார்க் களித்த பெருவரிசையைச் சோழமண்டல சதகமுடையார் தமது நூலில் எடுத்து விளக்குவதால் இச்சம்பவத்தின் உண்மை

உறுதி பெறுவதற்கு ஆதார மாகின்றது. அப்பாடல் வருமாறு :—

"திறையின்முறையென் றுலகறியச் செப்பும்பொய்யா மொழி-
தமிழ்க்காத்
துறையின்*னளகை ராசேந்திர சோழன் வரிசை தொகுத்தளித்தே
அறையும் பெருமைச் சீநக்க ராசூர் முதலா யேழூரும்
மறுவிலாது விளங்கியது வளஞ்சேர் சோழ மண்டலமே." (53)

இங்ஙனம், அரசூரில் வேளாண் மரபோர் செய்தவப் பயனாக வந்த சீநக்க வள்ளலின் அபிமானத்தில் பொய்யா மொழியார் சிறந்து வருநாளில், அடுத்த கண்டியூரிலிருந்த 'வண்ணாத்தி' யொருத்தி புலவர் பெருமானுக்குப் பெரு மகிழ் வெய்துமாறு அவரது ஆடைகளை நன்றாக மாசு நீக்கித் தூய வெள்ளையாக்கிக் கொடுத்து வந்தாள். அதற்குப் புலவர் உவந்து :—

"தூசுதூ சாக்குவார் பாவை சுடர்த்தொடிக்கை
ஆசிலாக் கண்டியூ ராரணங்கு—வாசமலர்க்
கண்ணங்கை கொங்கைமுகங் காலுங் கடிக்கமலம்
கண்ணங்கை கொங்கை முகங்கால்"

(த. நா. சரி. 75)

(பொ-ரை). "குற்றமில்லாத கண்டியூரின்கண் அழுக்கு நீங்க ஆடையொலிக்கும் வண்ணார் குலத்துவந்த ஒளி பொருந்திய வளையலை யணிந்த இலக்குமி யொத்த பாவை போல்வாளது கண், கை, கொங்கை, முகம், கால் ஆகிய இவைகள் வாசனையை வீசுகின்ற தாமரையை யொக்கும்.

'தூசு தூய்தாக்குவார் பாவை' என்றும் பாடம். தூசு தூசாக்குவார் என்ற பாடத்தில் இரண்டாவது தூசைத் தூய்தென்பதன் மரூஉ என்று கொள்க.

---

* அளகை யென்பது தஞ்சாவூர்க்கு ஒரு பெயராகையாலும், கோட்டை கட்டி அளகாபுரி என்று வழங்கப் பெறுவதாலும், இவன் ஆண்ட ஊர் இத்தஞ்சையே யாமென்றும், இவன் பெயர் ராஜேந்திரசோழனென்றும் கூறுப. இவன் கி.பி. 1011—1044-ல் தஞ்சையை அரசு புரிந்திருந்தான். சரித்திரங்கூறும் பெருமையுடையவன்.

இவன், ராஜாசிரயன், நித்யவிநோதன், சோழ அருமொழி, மும்முடிச் சோழன், ஜயங்கொண்ட சோழன், சிவபாதசேகரன்,

என அவனைப் புகழ்ந்தனர். பின்னர், ' குலோதுங்கச் சாவகன் ' என்னும் புலையன், புலவர்க்குப் பெருங்கோபம் உண்டாகும் படியான தீமை யொன்றுபுரிய பொருத புலவர் அவனை முனிந்து :—

" கோதில்குல மங்கைக் குலோதுங்கச் சாவகனென்
றோதினேன் றன்னை யொறுப்பதனால்—மாது
துளையாத முத்துவடந் தூக்கினா ளாரம்
விளையாடு செப்பிரண்டின் மேல்." (த. நா. சரி. 75)

(போ-ரை). " குலோத்துங்கனே ! நீ சாகக்கடவாய் என்று கூறியதனால் அவன் இறந் தொழிந்தான். அது கண்ட அவன் மனைவி கண்ணீர் சிந்தி வருந்தினாள்." துளை யாத முத்துவடம்—கண்ணீர்த்துளிகள். மாலைபுரள்கின்ற செப்பு—தனங்கள்.

க்ஷத்திரிய சிகாமணி என்ற பலபிருதுப்பெயர் வழங்கிய முதலாம் இராஜராஜன் மகன். இவ்விராஜேந்திர சோழனுக்குக் கங்கை கொண்டசோழன் என்ற பிருது ஒன்றிருப்பதைக் கொண்டு இவன் ஒருகாலத்தில், கங்கைக் கரைவரையில் திக்விஜயமாகச் சென்றிருந்தானென்று ஊகிக்கலாம். இந்தப்பெயர் கொள்ளிடத்துக்கு வடகரையில் இவன் நிர்மாணித்த 'கங்கைகொண்ட சோழபுரம்' என்னும், நகரத்தால் வந்ததென்ப. கஞ்சம் ஜில்லாவிலுள்ள மகேந்திரகிரி வரையில் இவன் படையெடுத்துச் சென்றதற்கு அம்மலைமேல் இவனது சாஸனம் காணப்படுவது சான்றாகும். கீழ்ப்பர்மாவை ஜயிப்பதற்குக் கப்பற்படை யொன்று அனுப்பினதாகவும் தெரிகின்றது. மேலைச்சளுக்கிய வரசனான இரண்டாம் ஜயசிம்மனோடு இவன் போர்புரிந்தான். போரின் முடிவுதெரியவில்லை. இருதிறத்தாரும் ஜயம்பெற்றதாகக் கூறுகின்றனர். ஈழம், ஒட்ரம், இலாடம், வங்காளம் முதலிய நாடுகளையும் இவன் ஜயித்தானும். ஏதோ ஒரு காரணம் பற்றித் தலைநகரைத் தஞ்சையினின்றும் மேற்சொன்ன

என்று வசைபாட, அப்புலையனுடல் வெடித்ததென்பர். தமிழ்நாவலர் சரிதையில், "புலையன்றன் உடல் வெடிக்கப் பாடிய வெண்பா" என்ற தலைப்புடன் மட்டும் இப்பாடல் காணப்படுகிறது. இதன் வரலாறு செவ்வனம் விளங்கவில்லை.

இவ்வாறு பொய்யா மொழிப்புலவர், சீநக்கப்பிரபுவுடன் தமிழ்நாடு ஒருங்கே புகழவாழ்ந்து வருநாளில் ஒரு நாளிரவிலே, சீநக்கன் சயனிக்குங் கட்டிலிலே பிரபுவும், புலவருமா யிருந்து பலவிஷயங்களை நெடுநேரம் சம்பாஷித்திருக்கையில், நாழிகை ஆனமையால் புலவர், சீநக்கனைப் போசனத்துக்குச் செல்லும்படி செய்து அயர்ச்சி மிகுதியால், அக்கட்டிலிற்றானே ஒருபுறமாக நித்திரைபோயினர். சீநக்கன் அமுதருந்தி நிலாமணி மேடையிற் சென்று சிறிது நேரம் உலாவிச் சயனத்திற்குத் திரும்பு முன்னே சீநக்கன் மனைவியும், கட்டிலிற் படுத்துறங்கு கிறவரைத் தன் கணவனென் றெண்ணி, அதில் ஒரு பக்கத்தில் தானும் படுத்து நித்திரை செய்தனள். சீநக்கன் வழக்கப்படி கட்டிலை அடுத்தபோது மஞ்சத்திற் புலவருடன் தன் மனைவி படுத்திருப்பதைக் கண்டு இஃது என் மனைவியின் அறியாமையால் நிகழ்ந்த செயலேயன்றிப் பிறிதன்று எனப் புலவரது அருமை பெருமைகளை யெல்லாம் நன்கறிந்திருந்தவனாதலின், அவர்பால் குற்றத்தை நினையாதவனாய் இவ்வுண்மையைப் புலவர்க்குத் தெரிவிக்கக்கருதிப் புலவரைச் சிறிது விழிக்கும்படி தட்டி யெழுப்ப, அவர் விழித்தலும், 'சிறிது விலகுதிர், ஒரு புறமாக யானும் படுப்பேன்'

கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாற்றி அங்குத் தஞ்சை ஆலயத்தைப் போன்றதோர் அழகிய சிவாலயத்தைக் கட்டினான். அக் கோயில் இப்போது சிலமாயிருக்கின்றது.

என்று கூறினன். புலவர், 'இங்கே படுத்தோமே என்று கருதினவராய் அயலிற் பார்க்கச் சீநக்கனது மனைவி தம்முடன் நித்திரை போவதை யறிந்து இஃதென்னை விளைந்தது' எனச்சரேலென விலகி நின்று திப்பிரமை கொண்டனர். இதனைக்கண்ட சீநக்கன் புன்முறுவல் கொண்டு 'புலவரே! அஞ்சற்க: ஒன்றும் நிகழ்ந்திலது.' என்னலும், இவ்விருவரது சம்பாஷணைகளால் சீநக்கன் மனைவி நித்ராபங்கமுற்று விழித்துக்கொண்டு தான் செய்த தவற்றை யறிந்து வெட்கி, அந்தப்புரம் நோக்கி ஓடினள். பொழுது விடியவும் இச்செய்தி சிலர் பலர்க்குத் தெரிந்து சிலநாளில் எங்கும் பரவ ஊர் முழுவதும் புலவர்பேரில் பேரபவாதத்தைச் சமத்தியது. இவ்வாறு அநியாயச் சொற்பரவிப் புலவர் காதிலும் அஃதெட்ட அப்போது 'புலவர்' :—

தரவு கொச்சகக் கலிப்பா.

* "தேரையார் தெங்கிளநீ ருண்ணார் பழிசுமப்பர்
நாரியார் தாமறிவர் நாமவரை நத்தாமை
கோரைவாய் பொன்சொரியுங் கொற்றவன்றன் கண்டி
யூரைவாய் மூட வுரையறிந்தோ மில்லையே." (த. நா. சரிதை 74.)

போ-உரை. "தேரை என்ற ஜெந்துவானது சிவந்த இளநீரைக் கண்ணால் பார்ப்பதன்றிக்குடைந்து உண்ணாதாயிருந்தும், பழி சுமக்கிறது. அதனை ஒத்தேன்யானும்) நாம் அவரை விரும்பாமையைக் கடவுளறிவார். கோரைகள் பொன் சொரியும் செழுமைவாய்ந்த கண்டி யென்னும் நகரத்திற்குத் தலைவனே! உலகத்தின் வாயை மூடுவதற்கு ஒரு சொல்லறிந்தோமில்லை. (உலகாபவாதம் பெரிதென்பதாம்.)

---

* 'தேரையார் செவ்விளநீர்' எனவும் பாடம்.

எனப்பெரிதும் இரங்கிக்கூறினர். ஆயினும், சிங்க வள்ளல் புலவரது ஒழுக்க உயர்வுகளை நன்கறிந்தவனை தால், முன்னிலும் பதின்மடங்கதிகமாக மதித்துத் தம் உயிர்த்துணைவராகக்கொண்டு புலவருடன் மனங்கலந்து களித்துவந்தான்.

இங்ஙனம், ஓருயிர் ஈருடற்கென்னும்படி அவ்விருவரும் நெடுநாள் வாழ்ந்து வருமிடையே "உடனுயிர் நீங்குமுரிமைத்தாயது" என்று முன்னோரால் புகழப்பட்ட * உணர்ச்சியொத்த உத்தமநட்பு அவ்விருவர்க்குள்ளும் விளங்குகின்ற மாட்சிமையைச் சோதிப்பவன்போல யமனவன், சிங்கனது ஆருயிர்க்கு இறுதிதேடவும், அப் பெருந்தகை உடனொத்த புலவர் பெருமானைத் தனியே விட்டுத் தன் நாடெலாமிரங்க வானுலகடைந்தான். இவ்வாறு தாம் வேறு, அவன் வேறு என்றெண்ணாது அபிமானித்த பெருவள்ளலும், தன்னுருயிருமா யிருந்தவனுமான சிங்கன் விண் சென்றதற்கு ஆற்றாதவராய்த் தம் வெற்றுடலைக்கொண்டு வாழ ஒருப்படாது சிங்கனுக்கு என்று வளர்த்த பேரெரியில் அவனுடன் வீழ்ந்து உயிர் துறப்பதே உயர்வென முடிவுகொண் டிருக்கையில், சிங்கன் மனைவி அக்கால வழக்கத்தின்படி அங்கு வந்திருந்த அரசனிடத்தில் உத்திரவுபெற்று † ஆசந்தியில் சென்று உடன் கட்டை ஏறினள். அடுத்திருந்த பொய்யா மொழிப் புலவரும், அவ்வாறே தாமும் ஆசந்திகை ஏறத் துணிகையில் சோழர்பிரான் அப்புலவரை அருகிலழைத்துத் தமிழுலகுவிரும்பும் அரும் பெரும் புலவீர்! நீர் சிதையில்

---

* "புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா—னட்பாங் கிழமைதரும்" என்னுந் திருக்குறள் காண்க.

† ஆசந்தி—பாடை.

வீழ்ந்து அநியாயமாய் உயிர் துறப்பது தகுதியல்ல. தெய்வக்கவிஞரை நல்லுலகம் இழக்கத் துணியுமோ? நாமகள் நூலிழக்க நேருமே! எனப் பலவகையாய்ப் பரிந்துரை கூறி வெகுவாய்த் தடுத்தும் புலவர் சிறிதும் கேளாராய்ச் சோழனை நோக்கி!

"வாழி சோழவென் வாய்மொழி கேண்மோ!
ஊழிநில வெறி மாளிகையின் வயிற்
கட்டிளங் கணவன் கவின்பெறு சேக்கை
யென்றறி மனைவி நெடிது துயில் கொளச்
செல்லக் கிடமி னெனக்கிடந் தருகெனச்
சொல்லிய நண்பன் றனிச் செல் பவனோ!
நானு மேகுவ னற்றுணை யவற்கே". (அபிதானகோசம்.)

(பொ-ரை) "வாழி சோழ வேந்தனே! யான் சொல்வதைக் கேட்பாயாக. முழுத்த நில வெறிந்த (ஒரு நாளிரவு) மேல் மாளிகையில், அழகும், இளமையும் வாய்ந்த கணவன் படுத்துறங்கும் கட்டிலென்று தெரிந்து (யான் கிடத்தலை அறியாது அவர் மனைவி) அடுத்துக் கிடந்து நீண்ட நித்திரை செய்ய (இடையில் விழித்த யான் சோகித்து வெளிப்படுகையில் மீண்டும் என்னை அப்படுக்கையில்) படுத்துறங்கென்று சொல்லிய (அருமையான என்) சினேகிதன் என்னைவிட்டுத் தனியே போவானோ? யானும அவனுக்குத் துணையாகச் செல்லுவேன்."

என்றுகூறி விடைகேட்டனர். அதுகேட்ட வேந்தன் பொய்யா மொழியார் சிநக்கன்பால் வைத்திருக்கும் களங்கமற்ற மெய்யன்பிற்குப் பெரிதும் அதிசயித்து இத்தகைய அருமைமிக்குடைய இனிய புலவரை அவமே இழக்க நேர்ந்திருப்பதற்கு மெத்தவருந்தி முடிவில் ஒன்று கூறினர்—"சீரிய குணமும் தெய்வப் புலமையும வாய்ந்த செந்தமிழ் வல்லீர்! இச்சிதை, கிடக்கும் இருவருக்கே மிக்க நெருக்கமா யிருக்கிறதே. உமக்கு எங்கே இடம்? இப்பிரேதம் சாய்ந்து ஒதுங்கிப் "போத்தியார்" என்னும்

புலவருக்குக் * கோப்பருஞ் சோழன் நடுகல்லில் இடங் கொடுத்ததுபோல், உமக்கும் இடங்கொடுக்கச் செய்யு மானால், நீரும் ஏறலாம். எனக்காட்சேபணையில்லை என் ருன். புலவர் நன்றெனச் சம்மதித்து, சிங்கனின் பொய் யுடம்பு கிடத்திய சிதை யருகிற்சென்று அப்பிரேதத்தை நோக்கி :—

---

* கோப்பெருஞ் சோழன், பொத்தியார் இவர்கள் வரலாறு அடியில் வருமாறு :—கோப்பெருஞ் சோழன்—இவன் உறையூரை இராசதானியாகக் கொண்ட ஒரு சோழன். கவிப்புலமைமிக்கவன். பிசிராந்தையர்க்கும் பொத்தியார்க்கும் உயிர்த்தோழன். தன்னோடு முரணிய இருபுதல்வருடன் போருக்கெழும் போது "புல்லாற்றூர் எயிற்றியனாரால்" பாடிச் சாந்தஞ் செய்யப்பட்டவன். பின்னர்த் துறவுபூண்டு வடக்கிருந்து தன்னுடன் உயிர்நீத்தற்கு வந்த பிசிராந் தையாரோடு சுவர்க்கம் புகுந்தவன். பொத்தியாரை மகன் பிறந்த பின்னர் வருகவென்று தான் உயிர் நீத்தும், அவ்வாறு வந்த அவர்க்கு இடங்கொடுத்தவன் என்ப.

பொத்தியார்.—உறையூரினர் ; கோப் பெருஞ்சோழனுடைய உயிர்த்தோழர். அவன் வடக்கிருத்தற்குச் செல்லுகையில் உடன் சென்று, நீர்பிள்ளையைப் பெற்றபின்பு ஈங்குவாரும்" என அவன் சொல்லக்கேட்டு மீண்டும் உறையூரடைந்து ; அவனது பிரிவாற்றாது சிறுநாள் வருந்தியிருந்து புதல்வன் பிறந்த பின்னர் அவன் உயிர் நீத்த நடுகல்லிடத்து வந்து,

"தீயால் விளங்கிய ஒளியையுடைய ஆபரணந்தாற் சிறந்த வடிவினை யுடையளாய் நின் நிழலினும் ஒருபொழுதும் நீங்காத நீ விரும்பத்தக்க மனைவி பெறப்பட்ட புகழமைந்த பிள்ளையானவன் பிறந்தபின் வாவெனச் சொல்லி என்னை இவ்விடத்தும் நின்று போக்கிய என்னோடு உறவில்லாதவனே! நின்னோடு என்னிடை நட்பைக் கருதாதிருப்பை யல்லை. புகழை விரும்புவோய், நீ எனக் குக் குறித்தவிடம் யாது? சொல்லுவாயாக." என்னுங் கருத்துத் தோன்ற :—

வெண்பா.

" * அன்றுநீ செல்லக் கிடவென்று யாருயிர்விட்
டின்றுநீ வானுலக மெய்தினாய்—வென்றிதிகழ்
மாநக்க பூண்மடவார் மார்பனே ! தென்னரசூர்ச்
சிங்கா செல்லக் கிட." (தமிழ் நாவலர். சரிதை.)

என்னும் அருஞ் செய்யுளைக் கூறியதும், எல்லாருங்காண அப்பிரேதம் சட்டெனப் புரண்டு திரும்பி புலவர்க்கு

" அழலவிர் வயங்கிழைப் பொலிந்த மேனி
நிழலினும் போகாநின் வெய்யோள் பயந்த
புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வாவென
வென்னிவ ணொழித்த வன்பி லாள
வெண்ணா திருக்குவை யல்லை.
யென்னிடம் யாதுமற் றிசைவெய் யோயே."(புறம் 222)

என்று பாடினர்.

உடனே பொய்யுடம்பொழித்துப் பொன்னுலகமெய்திய புண்ணியர் கோப்பெருஞ்சோழன், தமது நடுகல்லினின்றும், தொன்மை நட்புடையார் தம்மை யடுத்தோர்க்கு இடமுதவிப் பரிந்தளிப்பது போல் பரிந்தளித்துத் தன்னிடத்து இடமுதவித் துறக்கம் சேர்த்தினர் என்ப இது :—

"பலர்க்கு நிழலாகி யுலக மீக்கூறித்
தலைப்போ கின்மையிற் சிறுவழி மடக்கி
நிலைபெறு நடுக லாகியக் கண்ணு
மிடங்கொடுத் தளிப்ப மன்ற வுடம்போ
டின்னுயிர் விரும்புங் கிழமைத்
தொன்னட் புடையோர் தம்முழைச் செலினே." (223)

எனவரும் புறநானூற்றுச் செய்யுளால் அறியப்படும்.

* 'கண்டியூர்' 'வானுலமேறினாய்' 'நன்று நன்று' 'வானக்க' 'மாரனே' என்பன பாடபேதம்.

இடந்தர, உடனே புலவர் சிதையில் முன்னம், * கணைக் காலிரும்பொறை ' உயிர் நீத்ததற் காற்றாது அவன் பிரேதத்தின்மீது வீழ்ந்து உயிர்நீத்த 'பொய்கையா ' ரொப்பத் தாமும் வீழ்ந்து வானுலகு சென்றனர்.

---

* இவர்கள் வரலாறு அடியில்வருமாறு:—சோழர்களிற் சிறந்த, மானம் படவரின் வாழாமை முன்னினிது' என்பதைக் கடைப் பிடியாகக்கொண்டு மலைமண்டலமாகிய கருவூரில், செங்கோலோச்சிய '**கணைக்காலிரும் பொறை**' என்னும் சேரர்வேந்தன், அறிவாற்றல்களிற் சிறந்து ஒழுக்கம் பெருகி ஞான நூல்களை முறைப்படக் கேட்டுச் சந்தேகந்தெளிந்து முத்திமார்க்கத்திற்குச் செல்லநினைந்து அதற்கேற்ற தமிழாசிரியரைத் தேடினன். அவன் விரும்பிய சிறப்பனைத்தும் ஒருங்கே பொருந்தியவரும், சிலப்பதிகாரத்திற் குறித்ததும், கடல்கிலத்தை சேர்ந்ததும், சோழர்க்குரியதுமாகிய 'தொண்டி' யென்னும் ஊரினராகிய பொய்கையார் கிடைத்தனர். அவரை நல்லாசிரியராகக் கொண்டு தான் கற்கவேண்டிய வேதாந்த நூல்களை முறைப்படக் கற்றுவருகையில், சோழவேந்தனாகிய 'செங்கணன்' என்னும் பெருவேந்தனும், கணைக்காலிரும்பொறை யொப்பத்தானும் வேதாந்த சிரவணம்செய்து மேம்பட அப்பொய் கையாரையே ஆசிரியராகக் கோரினன். பொய்கையார் அதற் கிணங்காது மறுத்தனர். இங்ஙனம் சிலகாலம் செல்லுகையில், கழுமலம்" என்னும் ஊரில், கணைக்காலிரும் பொறைக்கும், செங்க ணனுக்கும், எல்லைத் தருக்கத்தால் போருண்டாக. அப்போரில் சோழன்வெற்றிபெற்றுச் சேரனையும், பொய்கையாரையும் சிறை செய்து காராக் கிரகத்திலடைத்தனன். சேரன் தனக்குநேர்ந்த தோல்விக்கு மெத்தவருந்தி அதே வியாகூலத்தால் தேகமிளைத்து உருக்குலைந்தனன். பொய்கையார் உடலிளைக்காமலும் மனம்வருந் தாமலும், ஒரேதன்மையி லிருந்தனர். இவர்களைக் காணவந்த செங்கணன் இதுகண்டு வியந்து புலவரை நோக்கிப் பெரியீர்! உமது அன்பனும், மாணவனுமான சேரன், உடம்பு துரும்பெனத்தேய்ந்து உயிர்க்கிறுதி வருவதுபோலிருக்க, உமதுடலும் மனமும் சிறிதும் வேறுபடாமல், பொலிவுடன் விளங்குதற்குக் காரணமென்ன?

'உடனுயிர் நீங்குமுரிமைத்தாய' பெருநட்பு முன்னர் கோப்பெருஞ்சோழன் * பிசிராந்தையர்க்குள்ளே இருந்ததாகக் கேள்விப்பட்டது, இப்போது சீநக்கன் பொய்யாமொழியாரிடத்தே காணப்பட்டதென்று உலகம் புகழ்ந்து இரங்கியது. இவ்வாறு பொய்யாமொழியார் தீப்புகுந்த அருஞ்செயலை முன்னம் புலவர்மேற் சீநக்கன் மனைவி சம்பந்தமாக அபவாதங்கூறிய ஊராரெல்லாம் கேள்வியுற்று இப்பெருந்தகைபால் அபராதம் விளைத்த என்

என்றனன். பொய்கையார் சோழன்மனதில் நன்கு படுமாறு, தனக்கும், உடலுக்கும், உலகத்துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்பதைப் பல உதாரணவாயிலாகச்செம்மைபெற விளக்கிக்காட்டினர். சோழன்கேட்டுத் திடுக்கிட்டஞ்சி ஜீவன்முத்தராகிய இப்பெரியாரை அறியாது சிறைசெய்த அபராதத்திற்கு மெத்த வருந்தி சிறைநீக்கிப் பிழை பொறுக்குமாறு பிரார்த்தித்து அவரை விடுத்தனன்.

சிறை நீங்கிய பொய்கையார், தமது அரசனும், மாணவனுமாகிய சேரனையும் விடுவிக்க நினைந்து, செங்கணனது வெற்றித்திறத்தைவியந்து "**களவழி நாற்பது**" என்னும் அருமைமிக்க பிரபந்தம் இயற்றி அரசனை மகிழ்வித்தனர். மகிழ்ந்த அரசன், இப்பிரபந்தத்திற்கு எப்பரிசு கேட்பினும் தருகிறேன். கேட்பீராக வென்றனன். புலவர் ஒன்றும் வேண்டாம். எமது உயிரனைய சேரனைச்சிறை நீக்குதல் ஒன்றே நாம் விரும்புவதும் என்றனர். அரசன் மாறுகூறாது சேரனைச்சிறை நீக்கினன். மானத்தால் வெளிவருதற்கஞ்சிச் சேரன் சிறையிலேயே உயிர் நீத்தான். அவனது பிரிவுக்காற்றாது வருந்திய பொய்கையாரும் அப்பிணத்தின் மீது வீழ்ந்து உயிர் துறந்தனர் என்பதே.

* புலமைமிக்குடைய இவர் கோப்பெருஞ் சோழன் நண்பராவர். பாண்டிநாட்டில் 'பிசிர்' என்னும் ஊரிலிருந்தவர். சோழன் உயிர் நீத்தது கண்டு பொறாது தாமும் உயிர்விட்டவர். இவர் பெயர் ஆந்தையாயிருக்கலாம். பிசிர் என்னும் ஊர்ப் பெயர் சார்ந்து இப்பெயர் பெற்றனர்போலும். இவரை இரும்பிசிராந்தையாரெனவும் வழங்குவர். ஆந்தை யென வேறொருவர் இருத்தலின், இவர்க்குப் பிசிராந்தை யெனப் பெயர் வந்தது.

களுக்கு உய்வின்மையால் யாங்களும் இறப்பதே கருமம் என்று, நீலி பழிகாக்கப் பழையனூர் வேளாளர் எழுபதின்மர் தீப்பாய்ந்து உயிர் நீத்தவாறு அவர்களிற் பலரும், தீப்பாய்ந்து குற்றம் நீங்கினர் என்ப. இச்செய்தியை :—

"புரைதீ ரரசைப் பதிபுகுந்த பொய்யா மொழியார் புகழ்தமிழ்கா
அரசூர் முதலா யேழுரு மழலிற் புகுந்த தரிதாமோ
தரைசூழ் மதிய மனுவாற்றுஞ் சான்றோ ரஃதாற் றொனுஞ்சொல்
வரையா தலகிற் பெற்றோரும் வளஞ்சேர் சோழமண்டலமே." (55)

என்னும் சோழ மண்டல சதகச்செய்யுளாலும்,

"சிற்றரசூர் பேரசூர் தென்மாவை பூந்தருத்தி
கொற்றமலி கண்டி குருகாவூர்—இத்தனையும்
வாய்ப்பா யமர்ந்தருளு மன்னுகுடி யத்தனையும்.
தீப்பாய்ந்த நல்ல திறம்."

என்னும் அதன்மேற் கோளாகிய பழைய செய்யுளாலும் அறிக.

இவ்வளவே, பொய்யா மொழிப் புலவர் வரலாறாகத் தெரிந்தவை. இச்சரிதங்களால் பொய்யா மொழியார் தெய்வப்புலமை வாய்ந்த பெரியாரில் ஒருவரென்பதும், பாட்டுக் குவந்தருளும் பரமேட்டியும, தமிழ் விரகராகிய முருகப்பிரானும், தண்டமிழ்க் காதலால் தண்ணருள் சுரந்து வலியச்சென்று தடுத்தாட்கொண்டு பாடப்பெற்ற சான்றோரென்பதும், இனிமையும், சிறப்பும் வாய்ந்த இன்றமிழ் நலங்குன்றாது பொலியச் சோழர், பாண்டியர் முதலிய வல்லரசர்களிடத்தும், பிரபுக்கள் பாலும் அருமுயிற்சியுடன் பல்கால் முயன்று பண்புபெறச் செய்த பாவல்லோரென்றும், தம்மை அபிமானித்து அன்புகாட்டியவ ரிடத்துத் தாமும் நல்லன்புகாட்டி நன்று

யொழுகிய நற்குணசீலரென்றும், கடவுட்பத்தியும், கருணைக் குணமும், கல்விமாட்சியும், ஒன்றுபட்ட மனமும், உயர்ந்த பேரெண்ணமும் உடையாரென்றும், மற்றும், இவரது உத்தம குண விசேடங்களும் நன்கு விளங்கும். இவர்க்கு வழங்கிய பொய்யா மொழிப் பெயர் இவரது உண்மை வாக்கின் விசேடத்தால் எழுந்த சிறப்புப் பெயராக விருக்கலாம். முன்னர்த் தெய்வப்புலமைத் திருவள்ளுவர்க்குப் "பொய்யில் புலவன்" * என வழங்கியமை காண்க. பொய்யா என்னும் எதிர்மறைப் பெயரெச்சம் மொழியார் என்னும் வினைக்குறிப்புப் பெயரது முதனிலையாகிய மொழியென்னுங் கருவிப் பெயர்கொண்டு முடிந்த தென்பர் இலக்கண நூலார். இத்தகைத் தமிழ்ப்பெருக்காளர், நலம்பெற விளங்கிக் கீர்த்திபடைத்தது நந்தமிழகமெனின், அதற்கு இதனினும் சிறந்த பெருமை யாதுளது?

இனி, இப்புலவர் பிரான் பாண்டியனவாக மேலே விளக்கிய பாடல்களில் "வாய்த்த வயிரபுரம்" என்பதும், "வாசமலர் மடந்தை போல்வார்" என்பதும், "தேரையார் தேங்கிளநீர்" என்பதும், கம்பர் வரலாற்றுடனும், "கூத்தாண் முகத்திரண்டு" என்பது காளமேகப் புலவர் வரலாற்றுடனும் இக்காலத்தார் வழங்கினர், அன்றியும் "உமையாளு நீயு மொருங்கோப்பே" என்னும் கம்பர் வாக்குப் பொய்யா மொழியாரதாக இப்போது காணப்படுகிறது. இப்பாடல்கள் மேல் பாடபேதங்களும் நிரம்பவுண்டு. ஆயினும், இவையெல்லாம் தமிழ் நாவலர் சரிதை, தொண்டைமண்டல சதகம், சோழமண்டல சதகம், பாண்டி மண்டலசதக முதலிய நமக்குச் சில நூற்றாண்டுகட்கு

* மணிமேகலை காதை 22. அடி 61.

முற்பட்ட நூல்களில் அவ்வப்பாடல் எழுந்த சரிதக்குறிப்புடன் மாறுபாடின்றி ஒப்பவழங்கப் படுதலால் இக்காலத்தார் வழக்கினும் முன்னோர் வழக்கே நாம் கொள்ளத்தக்கதென்பது ஐயமற விளங்கும்.

இனி, பொய்யா மொழியார் காலமின்ன தென்பதை ஆராய்வோம்: திருப்புகழில் அருணகிரிநாதர் இப்புலவர் பெருமானுக்கு முருகக்கடவுள் அநுக்கிரகித்த விஷயத்தை பலமுறை கூறுதல் மேலே அறியப்பட்டமையால், அவ்வருணகிரியார்க்குப் பெரிது முற்பட்டவர் நம்புலவர் பெருமானென்பது விளங்கும். அருணகிரிநாதர் காலம் இற்றைக்கு 460 ஆண்டுகட்கு முற்பட்ட தென்பர். அன்றியும் "நாற்கவிராச நம்பியென்பார்," "சான்றோர் இலக்கிய நோக்கி அகப்பொருள் விளக்க மென்றதற் கொரு நாமம் புலப்படப் பொருள் விரித்திருளற வெழுதி" என்ற பாயிரப்படி தாமே நூலும் உரையுமாகச் செய்த அகப்பொருள் விளக்கத்தே, பொய்யா மொழியாரது தஞ்சைவாணன் கோவையைப் பிரபலமாக எடுத்தாளுதலின் அந்நம்பியார்க்கும் இப்புலவர் முற்பட்டவ ரென்பது தெளிவாகும். * மேற்கூறியவாறு நம்பியாரே எழுதிய அகப்பொருளுரை

---

* நம்பியார் தம் அகப்பொருள் இலக்கணத்துக்குத் தஞ்சைவாணன் கோவையை இலக்கியமாகக் கொண்டா ரென்பதை மாற்றிப் பொய்யா மொழியார் தம் கோவையை நம்பியார் அகப்பொருள் இலக்கணத்துக்கு ஒப்பவைத்துப் பாடினார் என்பர் சிலர். நம்பிக்கு முற்பட்டவரென்று தெளியப்பட்ட பொய்யா மொழியார் வரலாற்றோடு இது மாறுபடுதலே யன்றி, "இலக்கியங் கண்டதற் கிலக்கணம்" என்று வழங்கும் வழக்கத்திற்கும் விரோதமாம். அன்றியும், பெரும்புலவராய் விளங்கிய பொய்யா மொழியார், பிற்காலத்தவராகிய ஜைனர் ஒருவர் நூலை வைத்து இலக்கியம் அமைத்தாரென்றல் அவர் பெருமைக்கு ஏற்றம் ஆகாமையுங் காண்க.

யில் தம் நூல் அரங்கேற்றப்பட்டது. பாண்டியன் குலசேகரன் காலம் என்று அவரே கூறுதலாலும், அப்பாண்டியன் கி. பி. 12-ம் நூற்றூண்டில் * மதுரையை ஆண்டவனென்பது மகா வமிசத்தும் பிறவற்றிலும் காணப்பட்டமையாலும், நாற்கவிராச நம்பி இன்றைக்கு 800 வருஷங்கட்கு முன்னிருந்தவரென்பது துணியப்படும். †

இவ்வாறு நாற்கவிராச நம்பி விளங்கிய 12-ம் நூற்றூண்டுக்கு முற்பட்டவர் என்று தெரிந்த பொய்யா மொழியார் எக்காலத்தில் விளங்கியவர் என்பதைக் கவனிப்போம். நச்சினார்க்கினியர் உரைப் பாயிரமாகக் கண்ட அகவலில் "வஞ்சிப்பொய்யா மொழிபுகழ்மையறு காட்சித், திருத்தகு முனிவன்" என்று கூறப்படுதலால், சிந்தாமணிசெய்த திருத்தக்க தேவர் காலம் இற்றைக்கு ஆயிரம்வருடங்கட்கு (கி.பி. 900) முன்பென்று காலஞ்சென்ற ஸ்ரீமான் து. அ. கோபிநாதராயர் அவர்கள், தக்கசாஸன ஆதாரங் கண்டு கருதுகின்றூர்கள். ‡ ஆதலால், அக்காலத்தையே நம்புலவர் பெருமானுக்கும் கூறத்தடையில்லை. தமிழ்நாவலர் சரிதையில், பொய்யா மொழியார் பாடல்களை, கம்பர், ஒட்டக்கூத்தர், முதலிய புலவர் பெருமக்களுக்கு முன்னும், ஔவையார்க்

* இவனன்றி, தென்காசியில் ஜடிலவர்மன் குலசேகரன் என்பவனும் ஒருவனுளன். இவன் கி. பி. 1463-ல் பட்டந்தரித்தவன் (செந்தமிழ்தொகுதி 4 பக்-114), நம்பிக்கும் பாண்டியன் இவனல்லன்.

† சோழவம்ச சரித்திரம், பக் 36. (செந்தமிழ் தொகுதி-பகுதி. (1)

‡ செந்தமிழ் தொகுதி 5 பக்-102

[library stamp]

கும் பின்னும் வைத்துக்கூறப்படும் வரிசையும், ஈண்டு கவனிக்கத்தக்கது. *

அன்றியும், அத்தமிழ் நாவலர் சரிதையில்,

" தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணு வதுஞ்சோழ மண்டலமே—பெண்ணுவா
ளம்பர்ச் சிலம்பி யரவிந்தத் தாளணியுஞ்
செம்பொற் சிலம்பே சிலம்பு"

எனவருஞ் செய்யுள், "பொய்யா மொழியார்பாதியும், ஔவையார் பாதியுமாகப் பாடிய வெண்பா" என்னுந்தலைப் பின்கீழ்க் காணப்படுவதாலும், இருவரும் முருகவேள் கேட்கப் பாடுதலாலும், கோவைபாடுதலாலும், ஒற்றுமை யுடன் கூடிய இவர்கள் ஒருகாலத்தவரெனக் கூறுதலும் தவறுகாது.

இனி, சிலர் கருதுமாறு, பொய்யாமொழியார் இருவ ரென்று கூறுதற்கு ஆதாரமில்லாததோடு தமிழ் நாவலர் சரிதையில் ஒருவராகவே வைத்து எல்லாப் பாடலும் காணப்படுதலாலும் அது பொருத்தமாகத் தோன்ற வில்லை. இம்முடிபுகளால், நம்புலவர் பெருந்தகை இற் றைக்கு ஆயிரம் வருஷங்கட்கு முன் விளங்கியவர் என்றே கொள்ளலாம்.

---

* மகாமகோபாத்தியாயர் ஸ்ரீமத் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தமிழ்நாவலர் சரிதையிற்கண்ட முறைவைப்புக் காலவொ ழுங்குப்படி அமைந்ததாகக் கருதியுள்ளார்கள். (சீகாளத்தியுலா ஆசிரியர் வரலாறு பார்க்க.)

தனிச் செய்யுட் சிந்தாமணியில், பொய்யா மொழியார், "பொய்யில் புலவராகிய திருவள்ளுவ நாயனார் திருக்குறளைப்பற்றிச் சொல்லியது" என்னுந்தலைப்புடன் ஒரு செய்யுள் காணப்படுகிறது. அது அடியில் வருமாறு:—

"குறுமுனிவன் கோத்தெடுத்த கோற்சேரி யூசி
உறுவிலைக்கு விற்றதனோ டொக்கும்—தெறுகலியைச்
செற்றவேன் மாற திருவள் ளுவனார் வாய்ச்
சொற்றகுமுப் பால்வாழ்த்துச் சொல்."

முற்றிற்று.

Printed at the Vest & Co., Mount Road, Madras.